**SKY WINGS LTD**
TRAVEL AGENTS WORLWIDE
24 hour Ticketing
ROYAL JORDANIAN
119 Tooting High Street
London SW17 0SY
Tel: 020 8672 9111

VADALEE

# வடலி

FREE - COMMUNITY PAPER சமூகப் பத்திரிகை March 2008 வடலி 8 ஓலை 83

எது? எப்பொழுது? எங்கே?
விரைவில்
www.udukku.com
உடுக்கு டொட் கொம்

# புள்ளி அடிப்படையில் புதிய குடிவரவு

பிரித்தானியாவுக்கு குடிபெயர விண்ணப்பித்தவர்களை புள்ளி அடைப்படையில் தெரிவு செய்து உள்ளே அனுமதிக்கும் முறை நடைமுறைக்கு வந்துள்ளது. இந்த முறையினால் ஆற்றல் உள்ளவர்கள் கவரப்பட்டு பிரித்தானியாவுக்கு வருவதற்கு விண்ணப்பிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் பிரித்தானியா தனது அபிவிருத்திக்கு தேவையான திறமையுள்ளவர்களை மட்டும் தெரிவுசெய்து உள்ளே அனுமதிக்க்கூடிய உகந்த சூழலை உருவாகிறது.

வர்த்தக நிறுவனங்களும் தங்களுக்கு தேவையான பணியாளர் களை முன் அனுமதி பெற்று அதாவது லைசன்ஸ் பெற்று இங்கு வரவழைக்க ஏதுவான வழிவகை களும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. ஒட்டு மொத்தத்தில் எல்லைகள் வலுப்படுத்தப்படுகின்றன, சட்ட விரோதப் பணியாளர்களை வேலைக்கு அமர்த்தும் வர்த்தக நிறுவனங்கள் பாரிய அபராதம் செலுத்த வேண்டிவரும். சிலவேளை களில் அபராதத்துடன் சிறையும் செல்ல நேரிடும். சட்ட விரோதமாக உள்ளே வருபவர்களை கட்டுப் படுத்துவதற்கு வலுவான நடைமுறையை கையாளுவதில் முன்னணி வகிக்கும் நாடு என்ற பெயரும் பிரித்தானியாவிற்கு வந்திருக்கிறது.

# மனதை எந்த அளவுக்கு நெறிப்படுத்துகிறோமோ அந்த அளவுக்கு நம் வாழ்க்கை இன்பமாக அமையும்!

மனித வாழ்க்கைக்கென உள்ள தனிப்பட்ட மகத்துவம் மனம். மனத்தால் வாழ்வதுதான் மனித வாழ்க்கை. அதிலிருந்து நாம் விரும்புவதை எடுத்துக் கொள்ளவும் முடியும், வைத்துக் கொள்ளவும் முடியும். அதன் துணைக் கொண்டு நாம் மகிழ்ச்சியுற எண்ணினால் நாம் மகிழலாம். வேதனைப்பட எண்ணி னால் வேதனைப்படலாம். மனத்தால் வாழக்கூடிய தன்மையும், ஆற்றலும் மனிதனைத் தவிர பிற உயிரினங் களுக்கு இல்லை. மனத்தில் உண்டாகும் உணர்ச்சிகள்தான் மனிதனது இன்ப, துன்பங்களுக்குக் காரணமாயிருக்கிறது.

“மனம் ஒரு குரங்கு” என்பார்கள். கிளைதோறும் தாவும் குரங்கைப் போன்று மனமும் தாவிக் கொண்ட இருக்கிறது. அலைபாயும் மனதை ஒருநிலைப்படுத்தினால் சோதனை களைத் தாண்டி சாதனைகள் படைக்க முடியும் என்பது சான்றோர்கள் அளித்த அனுபவப் பாடம். புற உலகைப் புரிந்து கொள்ள முற்படும் அளவிற்கு அக உலகை அறிந்து கொள்ள அக்கறை செலுத்தவில்லை.
மனம் என்பது மிகவும் சக்தி வாய்ந்த மர்மப் பணியாள். அதுதான் மனிதனுக்கு வாழ்க்கையை உருவாக்கித் தருகிறது. மனதை எந்த அளவுக்கு நெறிப்படுத்து கிறோமோ அந்த அளவுக்கு நம் வாழ்க்கை இன்பமாக அமையும்.
மனத்தின் அமைப்பையும், இயல்பையும், அதன் செயல்பாட்டுத் திறனையும் தெளிவாக விளங்கிக் கொண்டு மனத்தின் ஆற்றலைச் சீராக, சரியாகப் பயன்படுத்தி நல்லதொரு வாழ்க்கையினை அமைத்துக் கொள்ளும் முயற்சி யினைத்தான் மனவியல் என்று கூறுகிறார்கள்.

நமக்கு ஏற்படும் நோய்களுக்கு உடலியல் காரணங்களைக் காட்டிலும், மனவியல் காரணங்கள் தான் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மனதில் ஏற்படுகின்ற அச்சம், பீதி, கொந்தளிப்பு, கோபதாப உணர்ச்சி கள் ஆகியவை காரணமாக நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டு நோய்கள் ஏற்பட நேரிடுகிறது.
மனநலம் சரியாக இருந்தால்தான் உடல்நலமும் சரியாக இருக்கும். இதனால்தான் நோய் கண்ட மனிதரை அணுகும்போது, நோயை மட்டும் பார்க்காமல், அவரின் மனத்தையும் சேர்த்துப் பார்த்தால் தான் நோயைப் பூரணமாக குணப்படுத்த முடியும் என்று கூறுகிறார்கள் உளவியல் அறிஞர்கள்.

நம்மில் பலர் உடல்நலத்தில் காட்டும் அக்கறையை மனநலத்தில் காட்டுவ தில்லை. உடலுக்கு வரும் பிணிகளால் ஏற்படும் தொல்லை களைவிட உள்ளத்தில் ஏற்படும் பிணிகளால்தான் மனிதன் பெருந் தொல்லைகளுக்கு ஆளாகிறான். உடல்நோய் கண்ணுக்குத் தெரியும். மருந்து உட்கொண்டு குணப்படுத்திக் கொள்ள முடியும். ஆனால் மன நோயைக் கண்டுபிடிப்பது கடினம். மனம் பாதிக்கப்படும் போது மனிதனுடைய வாழ்க்கையே பாதிப்புக்குள்ளாகிறது.
நாம் அலைபாயும் மனத்தை நிலைப்படுத்துவது எப்படி? எல்லோர் மனதிலும் எழும் கேள்வி இது. மனம் எண்ணங்களின் உறை விடமாய் இருக்கிறது. எண்ணங்கள் தோற்றுவிக்கும் உணர்ச்சிகளின் வெளிப்பாடே நம்முடைய செயல் பாடு. நம்மைப் பற்றிய அபிப்பிராயத்தை பிறர் மனதில் ஏற்படுத்துவதே இந்தச் செயல்கள் தாம்.

உருவமற்ற, உணர்ந்து கொள்ள மட்டுமே முடிகின்ற எண்ணங்களின் புறத்தாக்கத்தை அன்றாட வாழ்வில் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், அவற்றை இணைத்துப் பார்த்து புரிந்து கொள்ள தவறி விடுகிறோம். நமது மகிழ்ச்சியான அல்லது துக்கமான எண்ணங்கள் கண்களில் கண்ணீரை வரவழைப்பதும், கோபமான எண்ணங்கள் ரத்த அழுத்தத்தை அதிகரிப்பதும், அதிர்ச்சி தரும் எண்ணங்கள் இருதயத்தைத் தாக்கி உடல் பாதிப்பை ஏற்படுத்துவதும், காம எண்ணங்கள் உடலில் உஷ்ணத்தை உண்டாக்கி மாற்றங்களை நிகழ்த்துவதும் அன்றாட வாழ்வில் எண்ணங்கள் உடலிலே தோற்றுவிக்கும் புற மாற்றங்களுக்கு சில உதாரணங்கள். ஒரு நிமிடம் கண்களை மூடி, மனத்தில் தோன்றும் எண்ணங்களை கவனித்தால் ஏதேதோ எண்ணங்கள் நிலையில்லாமல் தோன்றித் தோன்றி மறைந்து கொண்டேயிருப்பதை உணரலாம். நமது கட்டுப்பாட்டிற்குள் வராமல் எண்ணங்கள் ஒன்றொடொன்று மோதுவதை உணரலாம்.
நமது எண்ணங்களை ஒருமுகப் படுத்தும் பயிற்சியே மனத்தைக் கட்டுப்படுத்த உதவும் சிறந்த வழியாகும். மனத்தை ஒருமுகப் படுத்துவதில் மாயமந்திரம் எதுவும் இல்லை. முதலில் மனது ஒருமுகப் பட வேண்டும் என்ற முனைப்பு இருக்க வேண்டும். கண்களை மூடிக் கொண்டு தினமும் ஒரு பத்து நிமிடம் ஏதேனும் ஒரு பொருளைப் பற்றியோ, ஒரு கருத்தைப் பற்றியோ ஆழ்ந்து சிந்தனை செய்ய வேண்டும்.

ஆரம்பத்தில் எண்ணங்களை ஒரு கருத்தின் மீது குவிப்பது சிரமமாக இருக்கும். தொடர்ந்து முயற்சித்தால் சில நாட்களிலேயே மனம் ஒரு கருத்தின் மீது ஒரு சில நிமிடங்களாவது ஒருமைப்பட ஆரம்பிப்பதை உணரலாம். இரண்டுமாத காலத்தில் இந்த மன ஒருமைப்பாட்டுப் பயிற்சியின் மகத்துவத்தை அனுபவபூர்வமாக உணர முடியும். நமது சிந்தனையில் தெளிவு பிறந்திருப்பதையும், நமது செயல்களில் ஒழுங்கான தன்மை உருவாகி இருப்பதையும் உணர

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

Nerojan Silks

ராசியான முகூர்த்த புடவைகளுக்கு சிறந்த இடம்....
நீண்டகால அனுபவம் மிக்க திருமணக் கூறைப் புடவைகள் விற்பனையாளர்
www.nerojansilks.com
திருமணம், பூப்பு நீராட்டுவிழா போன்றவற்றிற்கான Hair Style உங்களுக்கு தேவையான முறையில் செய்து கொள்ளலாம்
Wedding Sarees and Fancy
Cotton Sarees, Churidhar
Latest Imitation Jewellery
273-275 Ilford Lane, Ilford, Essex IG1 2SD
Tel: 020 8553 5000
Mob: 07950 717 694

Travel RIGHT
The RIGHT people to do business
82 MITCHAM ROAD, TOOTING, SW17 9NG
ATOL 5766
Worldwide Travel Agent
Main Agents for
IATA
020 8767 7775
Mobile : 07850 876 921
E-mail : bala@skybooker.com

தரமான தங்கத்திற்கு இலண்டனில் சிறந்த இடம்
LAKSHMIS
JEWELLERS

276 High Street North, Eastham , London E12 6SA
Tel: 020 8470 5600 Fax: 020 8470 3448
தரமான தங்கநகைகளை மனநிறைவுடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
லக்சுமிஸ் ஜுவலர்ஸ்
தரமான தங்கத்திற்கு இலண்டனில் சிறந்த இடம்

Mortgagelink
The National Mortgage Network
Mob - 07930 626 585
Tel - 020 8946 5566
Nearest Underground :Tooting Broadway - Northern Line
Why Rent ... When you can Buy?
எந்தவிதமான Deposit இல்லாமல் வீடு வாங்க வேண்டுமா?
வாடகை வீடுகளில் வசிப்பவர்கள் சொந்தமாக வீடு வாங்கி வாழ விரும்புகிறீர்களா? னுநிழளவைந பிரச்சினையா? கவலை வேண்டாம். தற்போது கீழ்கண்ட கண்டங்களில் இடங்களில் வீடுகள் கைவசமுள்ளன. Mitcham, Thornton Heath, Peckham, South Norwood, Croydon, Eastdown Park, Streatham, Sydenham, penge, Catford
YOUR HOME IS AT RISK IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON A MORTGAGE OR OTHER LOANS SECURED ON IT

For News /Articles/ Adverts: 020 8694 7412
PO Box 24783 London SE13 7YE
E-mail: vadalee@lycos.co.uk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானியச் செய்திகள் - சி.மாசிலாமணி

# போதைப் பொருள் கட்டுப்பாட்டு முறையில் புதிய மாற்றங்கள் கொண்டுவரப்படுகின்றன

போதைப் பொருள் பாவிக்கும் குடும்பங்களுக்கு ஆரம்பத்திலேயே தலையீடு செய்துஉதவுதல், போதை மருந்து விற்பனையில் வாங்கப்பட்ட சொத்துக்களை பறிமுதல் செய்தல், புதியமுறையில் சிகிச்சை அளித்தல் போன்ற புதிய திட்டங்கள் கொண்டு வரப்படுகின்றன.
புதிய திருப்பம் என்பது சுருங்கக் கூறுவதாயின் போதைப் பொருட்களைக் கட்டுப்படுத்தும் அதே சமயம், போதை மருந்துகளுக்கு அடிமையாகுபவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு தகுந்த சிகிச்சை அளித்து அவர்களை தவறான முறையில் இருந்து வெளியே கொண்டுவர முயற்சிப்பதுதான் இந்த புதிய திருப்பம்.
போதைப் பொருள் வியாபாரத்தால் ஈட்டும் பணத்தை சுவிகரிக்க ஏதுவான வழிவகைகளை வகுத்து அவர்களுக்கு அவர்கள் தொழிலால் எந்தப் பயனும் கிடைக்காது என்று உணர வைக்க முயற்சிப்பதும் ஒரு திருப்பம். அதே சமயம் போதைப் பொருள்கள் உள்ளே வருவதைத் தவிர்க்க பந்நாட்டு ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப் படுகின்றன.

போதைப் பழக்கத்தை விட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் தொழிற் பயிற்சி ஒழுங்குகள் செய்தல் கவனத்திற்கு எடுக்கப் பட்டுள்ளது. போதைப் பொருளுக்கு அடிமையானவர்களின் குழந்தைகள் அடிமையாகாமல் பாதுகாக்க அக் குழந்தைகளை கண்காணிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

# கர்ப்பிணிப் பெண்களே! வேண்டாம் மது உங்களுக்கு: நைஸ்

தேசிய சுகாதார சேவைக்கு ஆலோசனை வழங்கும் நிறுவனமான 'நைஸ்' (NICE) மதுக் குடிக்கும் கர்ப்பிணிப் பெண்களை எச்சரித்துள்ளது.

அதிலும் முதல் மூன்று மாதங்களும் மதுவைத் தொடவே கூடாது என்று எச்சரித்துள்ளது. அதன் பின்பு தேவைஎன்றால் வாரத்தில் ஒரு முறையோ அல்லது இரு முறையோ ஒரு யூனிற் மது அருந்த அனுமதிக்கின்றது. ஒரு யூனிற் மது என்பது 90 மில்லி 12 வீத வைன் அல்லது அரை பைன்ற் 4% பியர் அல்லது 25 மில்லி 40% பிரன்டியோ அல்லது மற்றைய குடி வகைகளோ.

கர்ப்பமாக இருக்கும்போது குடிப்பதால் பிறக்கப்போகும் சிசு பாதிப்புக்கு உள்ளாகிறது என்று கண்டறிந்தள்ளனர். அப் பிள்ளைகள் வளரும்போது அவர்கள் கற்கும் திறன்கூடப் பாதிப்படையலாமாம். பிறக்கப்போகும் சிசுவின் நலனை கவனத்திற் கொண்டு விட்டமின் டி போலிக் அமிலம் ஆகியவற்றை கர்ப்பிணிகளுக்கு வழங்கும்படி தேசிய சுகாதார சேவைக்கு சிபார்சு செய்யப்படுகிறது.

# ஒரு வகுப்பில் 70 பேர்வரை படிக்கலாம்: பாடசாலைகளுக்கான அமைச்சர்

சென்ற மாதம் பாடசாலைகளுக்கான அமைச்சர் ஜிம் நயிற்றின் மேற்படி கூற்று ஆசிரியர் மத்தியில் பெரும் சீற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. நடக்கவிருக்கும் ஆசிரியர் சங்க ஆண்டு மாநாட்டில் வகுப்பின் மாணவர் தொகையை படிப்படியாகக் குறைத்து 2020 அளவில் 20 மாணவர்களாகக் குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தீர்மானம் கொண்டுவர உள்ளார்கள்.

# குடியுரிமைப் பரீட்சையில் முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

பிரித்தானிய குடியுரிமை பெறுதற்கு தேவையான 'லைவ் இன் த யூகே' (Life in the UK) குடியுரிமைப் பரீட்சையில் முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

வெளிநாட்டவர்கள் பிரித்தானிய குடியுரிமை பரீட்சையில் சித்தி எய்வதற்கு பல குறுக்குவழிகள் வழங்கப்பட்டு வருகிறது என பி.பி.சி இன புலன்விசாரணை ஒன்றில் தெரியவந்துள்ளது. குதிரை ஓடுவது மற்றும் சில ஆங்கிலம் கற்பிக்கும் பாடசாலைகள் பரீட்சைக்கான வினாக்களையும் விடைகளையும் கொடுப்பது போன்றவற்றின் மூலம் இந்த மோசடி நடைபெறுகிறது என மேற்படி விசாரணையில் அம்பலமாகியுள்ளது.

பி.பி.சி பத்திரிகையாளரால் மறைமுகமாக அனுப்பப்பட்ட ஒருவர் வேறொருவருக்காக பரீட்சை எழுதச் சென்றபோது நிலையைத் தவர்கள் கண்டுபிடிக்கவில்லை என்றும் வேறுமொழி பேசுபவர்களுக்கான ஆங்கிலம் (ESOL) கற்பிக்கும் ஓர் இடத்திலும் மோசடி செய்வதற்கு உதவி வழங்கப்பட்டுள்ளது. என இந்த புலன் விசாரணைக்கு உதவிய ரோனி என்னும் சீன இனத்தவர் கூறியுள்ளார்.

# கருமுளை ஆய்வுக்கு கத்தோலிக மதபீடம் எதிர்ப்பு

கருமுளையை ஆய்வுக்குப் பயன்படுத்தி அதன் அபிவிருத்தி மூலம் இலட்சக் கணக்கானோரை நோய் வேதனைகளிலிருந்து காப்பாற்றலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். இதைக் கவனத்திற்கு எடுத்து பாராளுமன்றம் அப்படிக் கரு முளையை பயன்படுத்த உரிமை வழங்கும் மசோதா ஒன்றை சபைக்கு கொண்டவர உள்ளது.

கரு முளை ஆய்வுக்கு கத்தோலிக்க மூத்த தலைமைக் குருவான காடினல் மோபி ஓகொன்னர் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். கத்தோலிக்க பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் சமய மனச்சாட்சிக்கு விரோதமில்லாத வகையில் வாக்களிக்கும்படி வேண்டுகோள் விடுத்துள்ளார். பிரதமர் இது சம்பந்தமாக கூறும்போது அப்படி அரசின் உறுப்பினர்கள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப வாக்களிக்க அனுமதிக்கப் பட்டாலும், அரசாங்கம் இந்த மசோதாவில் தோல்வி அடையாது பாதுகாக்கும் பொறுப்புப் பற்றி பேசியுள்ளார்.

இப்போ 'காடினல்' அவர்கள் விஞ்ஞானிகள் அவரைச் சந்தித்து விளக்கம் அளிப்பதற்கு அனுமதி கொடுத்துள்ளார்.

# துப்பாக்கி. தோட்டாக்கள் கைப்பற்றப்படும்போது அவற்றை குற்றச்செயல்களுடன் ஒப்பிட்டுப்பார்க்க புதிய முறை கையாளப்படவுள்ளது

இம் மாதத்திலிருந்து குற்றச் செயல்களின் போதும் தேடுதல்களின்போதும் கைப்பற்றப் படும் தோட்டாக்கள் துப்பாக்கிகள் ஆகியவற்றின் விபரங்கள் அதி நவீன முறையில் திரட்டப்பட்டு பொதுவான மின்-பதிவுக்குள் இடப்படுகின்றது. இதனால் குற்றச்செயல்களின் விபரங்களை ஒத்துப் பார்த்தல் எளிதாகிறது. ஆரம்பத்தில் பெர்மிங்கம், மன்செஸ்டர், இலண்டன் ஆகிய நகரங்கள் மட்டத்தில் இந்தமுறை கையாளப் பட்டாலும், இவ்வாண்டின் பிற்பகுதிக்குள் நாடு முழுவதுமுள்ள சம்பந்தப்பட்ட துறை அனைத்துக்கும் விரிவாக்கம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்பின் நாட்டின் எந்தப்பகுதியில் பயன்படுத்தப்பட்ட ஆயுதமென்றாலும் தரவுப் பரிமாற்றத்தின் மூலம் ஒப்பிட்டு உடனுக்குடன் வன்முறைக்கு பயன்படும் ஆயுதங்களின் தொடர்புகள் கண்டறியப்படும்.

இப்புதிய நவீனமுறை நாட்டின் துப்பாக்கிப் பாரம்பரியத்தை பூரணமாக நீக்குவதற்கு ஒரு அனுசரணையான சூழலை உருவாக்குகின்றது என நம்பப்படுகிறது.

# வெகு காலமாக பேசப்பட்டுவந்த அடையாள-அட்டை விநியோகம் அறிவிக்கப்பட்டுள்ளது

தேசிய அடையாள அட்டை வழங்கல் முறைக்கான திட்டவிபரங்கள் கடந்த பங்குனி மாதம் 6ம் திகதி உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் அடையாள அட்டை முதலில் ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் அடங்காத வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் இவர்கள் கைக்கு அடையாள அட்டை சென்றடைந்து விடும். அடுத்து மாணவர்களாக வருபவர்களுக்கும் திருமண விசாவுடன் வருபவர்களுக்கும் வழங்கப்பட உள்ளது.
கை அடையாளத்துடன் வழங்கப்படும் இந்த அட்டைகளில் அவரவரின் குடிவரவு, தராதரம், வேலை செய்யும் அனுமதி, அரச உதவி பெறும் தகைமை, வசிக்க அனுமதிக்கப் பட்டுள்ள கால எல்லை ஆகிய அனைத்துத் தரவுகளும் உள்ளடக்கப் பட்டிருக்கும்.
விமான நிலையம்போன்ற முக்கிய பகுதிகளில் பணிபுரியும் பிரித்தானியர்கள்கூட அடையாள அட்டையுடன்தான் அடுத்த ஆண்டிலிருந்து பணியில் ஈடுபடுவார்கள் என தெரிவிக்கப் பட்டுள்ளது.
2010ல் இருந்து வங்கிக் கணக்குகளை முதல் முறையாகத் திறக்கவேண்டியுள்ள புதுச் சந்ததியினரும் தன்னார்வ ரீதியில் இந்த அடையாள அட்டைகளைப் பெற வாய்ப்பு ஏற்படுத்தப்பட உள்ளது.

2011ல் இருந்து, கை அடையாளத்துடன் அங்கஅளவு முறையும் உள்ளடக்கப்பட்ட கடவுச்சீட்டிற்கு விண்ணப்பம் செய்யும்பொழுது தானாகவே அடையாள அட்டைக்கும் ஒரே நேரத்தில் பதிவுபெறக்கூடிய வகையில் ஏற்படுத்தப்படபோகின்றன. இரண்டையும் பெற விரும்பாதவர்கள் ஒன்றை மட்டும் வேண்டுமென்றால் பெற்றுக் கொள்ளலாம்.

ஆள் அடையாளத் திருட்டுக்களைத் தவிர்க்கும் நோக்கில் தேசிய அடையாள அட்டைப் பதிவேட்டில் இயலுமானவரை பதியப்படும் தரவுகள் சுருக்கமாகவே வைக்கப்படும்.

# தஞ்சம் கோருவோர்களை அணுகும்முறை ஒரு நாகரீகமான சமூகத்தின் தரத்திற்கு மிகவும் குறைவாக உள்ளது: அறிக்கை

உண்மைக் காரணங்களின் நிமித்தம் தஞ்சம் கோருபவர்களின் விண்ணப்பங்களை மறுத்தும், இங்கு இருக்கத் தகுதியில்லா தவர்களை வெளியே அனுப்பாமலும் சர்வதேச ரீதியில் நாட்டின் நற்பெயரை மழுங்கடிக்கும் வகையில் தஞ்சம் கோருவோருக்கான அணுகுமுறை உள்ளது. இவ்வாறு கூறும் அறிக்கை ஒன்று இளைப்பாறிய நீதிபதி ஒருவர் தலைமையில், விசாரணையில் ஈடுபட்ட சுதந்திர விசாரணை ஆணைக்குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
இவ்விசாரணைகளுக்கு தலைமை தாங்கிய முன்னாள் அப்பீல் கோட் நீதிபதியான சேர் ஜோன் வெயிற் இந்த அணுகுமுறை நாட்டிற்கு ஒரு அசிங்கத் தோற்றத்தை உருவாக்குகிறது என்றார்.
ஆணைக்குழுவின் அறிக்கை குடிவரவுச் சீர்திருத்தங்களைப் பாராட்டும் அதே நேரத்தில், சித்திரவதைகளிலிருந்து விடுபட்டு தஞ்சம் கோர உரிமையுடன் வருபவர்களை பிரித்தானியா அணுகும் தரமற்ற விதம் தங்கள் கவனத்தை பெரிதளவில் ஈர்ந்ததாகச் வர்ணித்துள்ளார்கள்.
நம்பிக்கை இன்மை காரணமாக எடுக்கப்படும் சில முடிவுகள் நியாயமற்றவையாக மாறுகின்றன. வசதிக் குறைவுகள் காரணமாக சில முடிவுகள் ஒழுங்கானவையாக இல்லை. எல்லாவற்றையும் விட அனுப்பப் பட வேண்டியவர்கள் திருப்பி அனுப்பப்படாத காரணத்தால் மக்கள் மத்தியில் தஞ்சம் வழங்கல் முறையில் அவநம்பிக்கை ஏற்படுகிறது. குழந்தைகள் கூட சிறையில் அடைக்கப்படும் சூழல் ஒரு குழப்பமாக உள்ளது. சித்திரவதைக்கு உள்ளானோர் விசாரணைகளை துரித முடிவுக்கு விட முடியாது. ஆனாலும் அப்படியான விசாரணைகள் கூட துரித முடிவுக்கு விடப்படுகிறது. இந்த அறிக்கை உள்நாட்டு அலவலகத்தினருடன் பேசிய பின்புதான் இறுதி வடிவம் பெறும்.

# சிகரட் காசு–மேசைக்கு கீழ் வைத்து விற்கப்படவேண்டும்

புகைத்தலைக் கட்டுப்படுத்த மேலும் வலுவான விதிகள் கொண்டுவரப்படுகின்றன.
15 வயதில் புகைக்க ஆரம்பிக்கும் ஒருவரையும் 20 வயதில் புகைக்க ஆரம்பிக்கும் ஒருவரையும் ஒப்பிடும்போது முதலாமவர் புற்று நோய்க்கு உள்ளாகும் சாத்தியம் இரண்டாமவரைவிட மூன்று மடங்கு அதிகம் என்று சுகாதார பகுதியினரின் அறிக்கை தெரிவிக்கின்றது. இதன் அடிப்படையில், சிகரட்டுக்களை காட்சிக்கு அடுக்கி விற்பனை செய்வதை சட்ட விரோதமாக்க ஆலோசனை செய்யப் பட்டுவருகிறது. எதிர்காலத்தில் காசு மேசைக்கு கீழ் வைத்துத்தான் அவற்றை விற்கவேண்டிய சூழல் உருவாகும்போல் உள்ளது. சாதாரண கடைகளுக்கே இந்த நிலை என்றால் சில வர்த்தக நிறுவனங்கள் வெளியில் காசு போட்டு சிகரட் பெறக்கூடிய விற்பனை சாதனங்கள் இன்னும் கூடிய கட்டப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும் என்று எதிர்பாக்கலாம்.

வயது குறைந்தவர்களுக்கு புகைத்தல் பொருள்கள் விற்றல் சட்டவிரோதம் என்ற அறிவிப்பு பார்வைக்க வைத்திருத்தலை கட்டாயம் ஆக்கினார்கள். பின் பொது இடங்களில் புகைத்தலை சட்ட விரோதமாக் கினார்கள். இப்போ புதியதொரு முறை பற்றியும் ஆலோசிக்கிறார்கள். புகைத்தல் சம்பந்தப்பட்ட பொருள்களின் தீர்வையைக் கூட்டி புகைப்பதற்கு பதிலாக உபயோகிக்கக் கூடிய பொருள்களின் தீர்வையைக் குறைக்க ஆலோசிக்கிறார்கள்.

வடலியில் வெளிவரும் ஆக்கங்களுக்கு படைப்பாளிகளும் விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். வடலி எந்த வகையிலும் பெறுப்பேற்காது. வாசகர்கள் அனுப்பும் ஆக்கங்களை திருத்தியமைக்கவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரை நூற்றாண்டுக்கு முன் குடாநாட்டில்!.. - 13

- தி.ச.வரதர்

# அக்காலத்து கிராமியக் கடைகள் எப்படியிருந்தன?

**1920ம் ஆண்டில் இருந்து 1960ம் ஆண்டு வரையிலான 40 ஆண்டு காலத்தில் தமிழ்பிரதேசங்களில் குறிப்பாக யாழ்குடாவில் சமூக ஈடுபாடு, சமூக கட்டமைப்பு, வாழ்க்கை முறை, வாழ்வாதாரங்கள், போன்றவை எப்படி இருந்தன என்று இப்போது இருக்கும் பலருக்கு தெரியாது.**

**பொதுவாக அறுபது 70களில் இருந்த வாழ்க்கை முறையே தான் அதற்கு முன்பும் இருந்திருக்கும் என்று அவர்கள் எண்ணுவார்கள். இது இயல்பே. ஆயினும் நிலமைகள் உண்மையில் எப்படி இருந்தன என்பதை ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரான திரு.தி.ச.வரதராசன் அவர்களின் நினைவில் மலர்ந்த சில சம்பவங்களின் ஊடாக வாசகர்கள் முன்கொண்டு வருகிறோம்**

**அப்பாவின் கடை**

எங்கள் கிராமத்தில் அப்பா ஒரு கடை வைத்திருந்தார். எனக்கு நினைவு தெரிந்த காலம் முதல் கடைசி வரையும் அவருடைய தொழில் அந்தக் கடைத்தான். எங்கள் வீட்டின் பின்பக்க விறாந்தையில்தான் கடை. விறாந்தைக்கும் தெருவுக்கும் இடையில் சுமார் நான்கு அடி இடைவெளியிருக்கும். விறந்தையிலிருந்து தெரு ஓரம் வரை பந்தி இறக்கியிருந்தது. விறாந்தையின் நடுப்பகுதியில் கடைக்கான பெரிய வாசல். அதன் இருபுறமும், பந்தியில் இரண்டு வாங்குகள் போடப்பட்டிருந்தன. அந்த வாங்குகளில் எந்த நேரமும் யாராவது இருந்து கதைத்துக் கொண்டேயிருப்பார்கள். கடைக்குப் பொருள் வாங்க வருபவர்களும் சில சமயங்களில் அங்கே தங்கிக் கதைத்துவிட்டுப் போவார்கள். ஊரில் அவ்வப்போது நடக்கும் நிகழ்வுகள் தொடக்கம் உலக விவகாரங்கள் வரை அவர்களுடைய உரையாடலில் அடிபடும்.
அப்பா அதிகம் கதைக்கமாட்டார். எப்போதாவது சுருக்கமாகத் தமது அபிப்பிராயத்தைச் சொல்லுவார். அந்தக் 'கடைச்சபை'யில் ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் கலந்து கொள்வார்கள்.

விறாந்தையின் நீளம் சுமார் இருபத்தைந்து அடி, அகலம் பத்து அடியிருக்கும். அந்த விறாந்தை நீளத்துக்குப் பலவிதமான பொருள்களும் பரவிக் கிடக்கும். சுவர் ஓரமாக ஒரு றாக்கை. அதில் தகர டப்பாக்களிலும், போத்தல்களிலும் விற்பனைப் பொருள்கள் அடுக்கியிருக்கும். சுவரின் இன்னொரு பக்கமாக ஒரு கோர்க்காலியில் சில சாக்கு மூட்டைகளிலும், பனை ஓலை உமல்களிலும் சில பொருள்கள் இருக்கும். எனக்கு இப்போதும் அந்தக் கடையில் இருந்த பொருள்கள் வரிசைக் கிரமமாக நினைவில் இருக்கின்றன. அந்தப் பொருள்களைக் கவனித்தால் அன்றைய மக்களின் தேவைகளைப் பற்றி ஓரளவு தெரிந்து கொள்ளலாம்.

விறாந்தையின் மேற்குச் சுவரோடு மண்சட்டி பானைகள் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கியிருக்கும். புரட்டாசிச் சனிக்கிழமைகளில் சனீஸ்வரனுக்கு எரிக்கும் சிறிய சட்டிகள் முதல், உலைமூடிகள், தட்டைச் சட்டிகள், குண்டான் சட்டிகள், பானைகள், கள்-கருப்பநீர் சேர்க்கும் முட்டிகள் இப்படிப் பலவித பாண்டங்களும் அங்கேயிருக்கும். 'சனிஸ்வரனுக்கு எரிக்கும்சட்டி' என்றதும் நினைவு வருகிறது. பொன்னாலை கிருஷ்ணன் கோயிலுக்கு அப்போது மிகப் பொருந்தொகையான சனக்கூட்டம் வருவது புரட்டாதிச் சனிக்கிழமைகளில்தான். 'கடைசிச் சனி' என்றால் அதிகாலையிலிருந்து பொழுது படும் வரை சனக்கும்பல்தான்.

இப்போது எல்லாக்கோயில்களிலுமே நவக்கிரகங்கள் அமைந்திருக்கிறார்கள். நவக்கிரகங்களில் சனிஸ்வரனும் இருப்பார். அந்தந்த ஊரில் இருப்பவர்கள் தங்கள் தங்கள் கோயிலிலுள்ள சனிஸ்வரனை வழிபட்டுத் தப்பிக் கொள்கிறார்கள்.
ஆனால் அந்தக் காலத்தில் பொன்னாலைக் கிருஷ்ணன் கோயிலில் மட்டும்தான் சனிஸ்வரனுக்கென்றே தனியாக ஒரு கோயில் இருந்தது.

அந்தச் சனிஸ்வரன் மிகவும் பிரசித்தமானவர். கிருஷ்ணன் கோயிலோடு சேர்ந்திருக்கும் சனிஸ்வரனுக்கு சக்தி அதிகமாம்! யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலிருந்தும் நடந்தும், மாட்டுவண்டிகளிலும், சிலர் மோட்டார் வண்டியிலும் சனீஸ்வரனைத் தேடிக்கொண்டு அங்கே வருவார்கள். கோயிலுக்கும் நல்ல வருமானம், சட்டி. எள்ளுப்பொட்டலம், எண்ணெய் எல்லாவற்றையும் வெளியில் வாங்கிக் கொண்டுபோய், சனீஸ்வரனின் கோயிலின் முன்பாக வைத்து எரிப்பதற்கு கட்டணம் பத்துச் சதம்! (ஒரு கொத்து அரிசியின் காசு!)

அது இருக்க, மறுபடியும் அப்பாவின் கடைக்கு வருவோம். சட்டி பானைகள் அடுக்கியிருந்த இடத்தை அடுத்து, வெளிக்கிறாதி ஓரமாக ஒரு மண்பானையில் 'ஊத்தைச் சோடா' இருக்கும். ஊத்தைச் சோடாவை பானையிலிருந்து அள்ளி எடுப்பதற்கு ஒரு அகப்பையும் இருக்கும். சோடாவைக் கையினால் எடுத்தால் அது கையைக் கடிக்கும். கடையிலிருக்கும் சர்க்கரை, சீனி, கற்கண்டு முதலிய இனிப்புப் பொருள்களை நான் அவ்வப்போது எடுத்து வாயில் போட்டுக் கொள்வது வழக்கம். அந்த வழக்கப்படி, பானையிலிருந்து ஊத்தைச் சோடாவை மாச்சீனி (ஐசிங்சுகர்) என்று நினைத்துக் கிள்ளி வாயில் போட்டுவிட்டேன்.

பிறகு நான் குழறிக் கூக்குரலிட்டதும், அயலட்டையெல்லாம் கூடி ஆளுக்கொரு கதை சொன்னதும் யாரோ ஆட்டுப்பாலைக் கொண்டுவந்து குடிக்கத் தந்ததும் நினைவிருக்கிறது. ஊத்தைச் சோடாப் பானைக்குப் பக்கத்தில் ஒரு பெரிய தகர டப்பாவில் மண்ணெண்ணெய் இருக்கும். சுமார் ஒரு அடிச் சதுரமும் ஒன்றரை அடி உயரமுள்ள தகர டப்பா வெள்ளை வெளேரென்ற நிறம். எழுத்துக்கள் லேபில் எதுவுமில்லை. தலைப்பக்கத்தில் சிறிய கைப்பிடி இருக்கும். தலைப்பக்கத்தின் ஒரு மூலையிலுள்ள அதன் வாயை உடைத்து அதற்குள் ஒரு 'பம்' வைத்திருக்கும். அந்தப் 'பம்'மை அடிக்க மண்ணெண்ணெய் குழாய் வழியாக வெளிவந்து பக்கத்தில் தயாராக வைக்கப்பட்டிருக்கும் புனல்வைத்த போத்தலில் விழும்.
போத்தல் கணக்காக மண்ணெண்ணெய் வியாபாரம் அநேகமாக நடப்பதில்லை. ஒரு சிறிய அளவு கரண்டி இருந்தது. அது நிறைய விட்டால் இரண்டு சதம். (ஒரு

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

## போதைப் பொருள்களும் ஆயுதங்களும் ஆசிரியர்களின் கைகளில் சிக்குகின்றன.

போதைப் பொருள்களையும் ஆயுதங் களையும் பாடசாலைகளுள்கொண்டு செல்லும் தொகை அதிகரிக்கிறது என ஆசிரியர்களின் ஆய்வுகளில் இருந்து தெரியவந்திருக்கிறது. ஆசிரியர்கள் உலோகம் கண்டறியும் சாதனங்களை உபயோகிக்கவும் மாணவர் களைச் சோதனையிடவும் உரிமை பெற்றுள்ளதால் அவர்கள் கைக்கு அவை சிக்குகின்றன. ஆனாலும் இந்த பிரச்சனை திகில் ஊட்டுமளவுக்கு பெரிதாக இல்லை என்பது அரசாங்கத்தின் அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது.


**Croydon Tutorial College**

A CENTRE OF ACADEMIC EXCELLENCE
30-32 Southend, South Croydon, Surrey, CR0 1DN
Tel:020 8688 5777 Tel/Fax: 020 8688 5776
Email: admin@croydontutorialcollege.co.uk

**Disappointing Results???**

*Enrol now for GCSE, GCE AS and A2 FULL TIME CLASSES*

**For November/January/June Examinations**

Coaching by experienced tutors
Official Examination Centre for all UK's leading Exam Boards

- Physics
- Chemistry (Including Salters Chemistry)
- Biology
- Maths (Pure, Mechanics, Statistics)
- English
- ICT
- Accounts
- Further mathematics
- Modern Languages
- Business Studies
- Economics

GCSE REVISION
English
Mathematics
Physics
Biology
Chemistry
ICT/Computing
French/German/Spanish

- Life In the Uk
- ESOL
- IELTS

Classes already started only a few places left


Evening classes for Years 7, 8, 9, 10, GCSE, AS and A2.

*Press fast forward to reach your potential*

Visit our website - www.croydontutorialcollege.co.uk

South Harrow பகுதியில் GLOBAL VIDEO ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் புதிய உதயம்

**Global Fresh Fish**


அனைத்து வகையான தரமான இலங்கை இந்திய கடலுணவு வகைகளை மலிவாக நீங்கள் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள் உங்களின் எண்ணம் போல் வெட்டி சுத்தம் செய்தும் தரப்படும்

இலங்கையில் இருந்து தருவிக்கப்பட்ட உடன் மீன்கள்

Opening Time: காலை 9.00 முதல் இரவு 7.00

சிறுவர்களில் இருந்து பெரியவர்கள் வரை உங்களுக்கு பிடித்த முறையில் சிகைஅலங்காரம் செய்துகொள்ள நாடுங்கள்.

Bureau De Exchange,
Cheque Cashing, Money Transfer

தமிழ் DVD, Audio
பல வகையான நூல்கள் மற்றும் சஞ்சிகைகள்

| Uniglobe Exchange Ltd | Global Fresh Fish | Sutha Saloon | Global Home Entertainment |
|---|---|---|---|
| 230 Northolt Road | 230 B, Northolt Road | 230 C, Northolt Road | 230 D, Northolt Road |
| South Harrow | South Harrow | South Harrow | South Harrow |
| HA2 8DU | HA2 8DU | HA2 8DU | HA2 8DU |
| Tel: 0208 423 9988 | Tel: 0208 423 9938 | Tel: 0208 864 4143 | Tel: 0208 423 7744 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடலி

தொலைபேசி:
020 8694 7412

தொலைநகல்:
020 8694 7412

விளம்பரம்:
020 8694 7412

மின்னஞ்சல்:
Vadalee@lycos.co.uk

இணையம்:
www.vadalee.com

முகவரி:
VADALEE
PO BOX - 24783
LONDON
SE13 7YE

இப் பத்திரிகையை மாதம் தோறும் தபாலில் பெறுவதற்கு ஓர் ஆண்டு சந்தா 7.00 பவுண்கள். ஐரோப்பாவுக்கு 25 யூரோக்கள்

Cheque or Postal order
Payable to: VADALEE


# பக்தியா - அதிஷ்டமா - மூடநம்பிக்கையா?

நம்மில் சிலர் தமக்கு நன்மை வரும் என்றால் எதையும் கண்மூடிக்கொண்டு பின்பற்றத் தயங்கமாட்டார்கள். 6-வது அறிவு பயன் படுத்தப்படுவதில்லை.

ஒரு பொருளை வீட்டில் வைத்திருந்தால் அதனால் நன்மை வரும் என்றால் ஆராய்ந்து



பார்க்காது அந்த பொருளை தனது வீட்டிலும் வாங்கி வைக்க அவர் மனம் விரும்பும். அந்த பொருள் நன்மை கொண்டு வருமா இல்லையா என்ற கதை வேறு. அதை நானும் வாங்கி வைத்துவிடுவோம் என்றே அவரின் மனம் அவருக்குச் சொல்லும். மற்றவர்களும் அதை வாங்கி வைத்து நல்லா வருகிறார்களாம் எனவே தானும் வாங்கி அதை வைத்து விடுவோம் என்பதே அவரின் மனஅமைப்பு.

காரணத்தை யாராவது கேட்டால், வேறொருவரைச் சாட்டி அவர்தான் எனக்கு இதைத் தந்தார் எனக்கூறிவிடுவார். தமது விடா முயற்சியினாலும் திறமையினாலும் வெற்றிபெற்ற சிலர் கூட, தமக்கு இந்த பொருளை வைத்திருப்பதனால் தான் அவ்வாறான வெற்றியை பெற முடிந்தது என நம்புபவர்களும் இருக்கிறார்கள். இப்படியான பொருட்களை சாமிப் படங்களுடன் வைத்து 'ஓவறோளாக'க் கும்பிடுகிறவர்களும் இருக்கிறார்கள். இப்பழக்கம் சில படித்தவர்களில் இருந்து பாமரமக்கள் வரை புரையோடியுள்ளதைக் காணலாம்.

'லேட்டஸ்டாக' இப்பொழுது கனடா, ஐரோப்பா, இங்கிலாந்து என்று ஒரு சிரிக்கும் புத்தர் பொம்மை ஒன்று உலாவி வருகிறது. இதை பலகாலமாக தாம் வைத்திருப்பதாக கூறிப் பெருமைகொள்பவர்களும் இருக் கிறார்கள்.

ஆனால் இந்த சிரிக்கும் புத்தர் உருவம் போதிசத்துவர் மைத்ரேயாவின் தத்துவ விளக்கமாகும். இது கோரெய் (Hotei) என்றும்கூட அழைக்கப்படுகிறது. இந்த சிரிக்கும் புத்தர் திருப்தியின், மனநிறைவின் தெய்வமாகும். சீனாவின் புராணக் கதையின்படி தனது பெரிய வயிற்றை ஒருவர் தடவிக்கொள்வது செல்வத்தையும், அதிர்ஷடத்தையும் முன்னேற்றத்தையும் கொண்டுவரும் என்பதாகும்.

எப்போதோ எக்காலத்திலோ கூறப்பட்ட கதையை பணம் சம்பாதிப்பதற்காக யாரோ ஒருவர் இதை அதிர்ஷ்ட புத்தர் என்று சொல்லி விற்க, அதை வாங்கி வீட்டில் வைத்தால் அதிர்ஷ்டம் வந்துவிடும் என்ற மாயையில் அப்புத்தர் பெம்மையை வாங்குவது பக்தியா - அதிஷ்டமா - மூடநம்பிக்கையா? எப்படிச் சொல்வது? இது மாத்திரமல்ல இது போன்ற பல பொருட்களை வாங்கிவைத்துக்கொண்டு அதிர்ஷ்டம் வரும் என்ற நினைவில் வாழ்ந்துவருபவர்களும் இருக்கிறார்கள். முயற்சியும் கடினஉழைப்புமே வெற்றிக்கான பாதைகள்

\- நெ.மு

# புற்றுநோய் செல்களை வளர்க்கும் 'என்சைம்' எதுவென்று கண்டுபிடிப்பு!

புற்றுநோயை உடலில் பரவச் செய்யும் செல்களை ஊக்கப்படுத்தும் 'என்சைம்' எதுவென்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக் கிறார்கள். ஆராய்ச்சி மேலும் தொடருகிறது. புற்றுநோயாளிகளுக்குத் தரும் மருந்தை வீரியம் உள்ளதாக மாற்ற இந்த கண்டுபிடிப்பு பயன்படக்கூடும்.

அமெரிக்க கார்வர்ட் மருத்துவப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் லூயி கேன்ட்லி என்பவர் தலைமையிலான குழு இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளது. கான்சர் செல்கள் கட்டுக்கு அடங்காமல் வளர உடலில் உள்ள குளுகோஸ்களை அதிகம் சாப்பிடுகிறது. அந்தச் செயலுக்குத் துணைபுரியும் என்சைம் 'பருவேட் கினாசே' என்று அழைக்கப்படுகிறது. அதிலும் இருவகை இருக்கிறது. அதில் 'பிகேஎம்-2' என்று அடையாளம் காணப்பட்டுள்ள என்சைம்தான் அதிக அளவில் குளுகோசைச் சாப்பிட வைக்கிறது.

இந்த என்சைமைக் குறைத்தாலோ, கட்டுப்படுத்தினாலோ புற்றுநோயின் வீரியத்தைக் குறைத்துவிட முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

ஆய்வுக்கூடத்தில் உள்ள எலிக்கு இந்த என்சைமைக் கொடுத்தும், நீக்கியும் சோதித்ததில் இது ஊர்ஜிதம் ஆனது. ஆனாலும் மேலும் சில சோதனைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது.

75 ஆண்டுகளுக்கு முன்னால் நோபல் பரிசு வாங்கிய ஜெர்மானிய அறிஞர் ஆட்டோ வார்பர்க் என்பவர், புற்றுநோய் செல்கள் அதிக அளவில் குளுகோஸ்களைச் சாப்பிடுகிறது என்று கண்டுபிடித்தார்.

ஆனால் அவரால் அதற்குக் காரணமான என்சைம் எது என்று திட்டவட்டமாகக் கண்டுபிடிக்க முடியவில்லை.

# எலி ஏற்படுத்திய கிலி

தெரு நாயொன்றைச் சுட்டால், அதற்கு அத்தாட்சியாக அதன் வாலை அறுத்து எடுத்து வரவேண்டும். தான் மொத்தமாகச் சுட்டுக் கொன்ற தெருநாய்களின் எண்ணிக்கையை மேலதிகாரிகளுக்கு அத்தாட்சிப்படுத்த, இந்த வால்களின் தொகைதான் ஓர் ஊழியருக்கு அந்தக் காலத்தில் உதவியது. இது 45 ஆண்டுகளுக்கு முன்பு நேரில் கண்ட நிகழ்வாகும். இந்த நிகழ்வு, இந்தக் கணனி யுகத்திலும், இப்பொழுது சம்பவித்துக் கொண்டுதான் இருக்கின்றது. இதில் வால் அறுக்கப்படுபவை நாய்களல்ல. எலிகள் என்பதுதான் வித்தியாசம். பர்மாவையும், பங்களாதே" நாட்டையும் எல்லைகளாகக் கொண்ட ஓர் இந்தியக் குக்கிராமத்தில் எலிகளின் படையெடுப்பு, பெரும் நாசத்தை ஏற்படுத்தி வருகின்றது. பெருந்திரளான எலிகள் அகப்படுவதையெல்லாம் தின்று தீர்ப்பதால், இங்குள்ளவர்கள் உணவுப் பஞ்சத்தால் பரிதபிக்கின்றார்கள். குறைந்த பட்சம் 100,000 பேர் வரையில் உண்ண உணவேதுமின்றி அல்லல்படுவதாக சமீபத்திய செய்திகள் தெரிவிக்கின்றன. 48 ஆண்டுகளுக்கு ஒரு தடவை, மிஸோராம் என்ற இந்தப் பிராந்தியத்தில் பெருமளவு மூங்கில் செடிகள் பூத்துக் குலுங்குகின்றன. இந்தப் பூக்கள்தான் எலிகளைத் தமது விருந்தாளிகளாக அழைக்கின்றன. மூங்கில்கள் பூப்பதும், எலிகள் படையெடுப்பதும், தொடர்ந்து உணவுப் பஞ்சம் ஏற்படுவதும் இங்கு காலங்காலமாக நடந்து வருகின்றது. 1958இல் இந்த எலிகளால் பெரும் பஞ்சம் ஏற்பட்டதுடன், குடிமக்கள் உணவு தேடி காடுகளுக்கு விரட்டப்பட்டும் இருக்கின்றார்கள். இந்த ஆண்டும் பெருவாரியாகக் காணப்படும் எலிகளால் பெரும் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அரசோ எலிவேட்டையில் இறங்கியுள்ளது. பொதுமக்களிடம் எலிகளைப் பிடிக்கும் பணி விடப்பட்டுள்ளது ஓர் எலிவாலுக்கு ஒரு ரூபாய் சன்மானமாம். இந்த வழியில் அரசு பஞ்சத்தைப் போக்கிவிடுமா?

# சித்திரைத் திருவிழா – 2008

தென் இந்திய முன்னணி பாடகர்கள் பங்குகொள்ளும் IBC அனைத்துலக




ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சித்திரைத் திருவிழா 2008, இம் மாதம் 12ம் திகதி சனிக்கிழமை, Harrow Leisure Centre, Christchurch Avenue Harrow, Middlesex, HA3 5BD என்னுமிடத்தில் நடைபெறவுள்ளது. இந்த இசை விருந்தில் எஸ்.ஜானகி, மனோ, ரி.எல். மகாராஜன், கிருஸ்ணராஜ், சைந்தவி மற்றும் பலர் பங்குபற்றுகிறார்கள். மேலதிக தகவல்களை 020 8100 0012 என்னும் எண்ணில் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

# அக்காலத்து.... (3ம் பக்க தொடர்ச்சி)

போத்தல் மண்ணெண்ணெய் பத்துச் சதத்துக்குள்ளாகவே இருக்க வேண்டும்) மண்ணெண்ணெய் அப்படி மலிவாக இருந்த போதிலும் கிராமத்து மக்கள் மிகவும் கட்டுச் செட்டாகவே அதை உபயோகிப்பார்கள்.

பலருடைய வீடுகளில் அரிக்கன் லாம்பெல்லாம் கிடையாது. தகரத்தில் செய்த குப்பி விளக்குத்தான். பின்னால் அது பித்தளையில் அழகாகச் செய்யப்பட்டு புழக்கத்திலிருந்தது. மண்ணெண்ணெய் தகரத்துக்குப் பக்கத்தில் கடையின் நடுநாயகமாக ஒரு 'ஐஞ்சறைப் பெட்டி'. ஆனால் அந்த அடுக்கில் ஐந்தல்ல, பல அறைகள் இருந்தன. ஒவ்வொரு அறையிலும் சரக்கு. மல்லி, மிளகு, வெந்தயம், சீரகம், வெண்காயம் முதலியன இருக்கும். ஒரு பக்க ஓரமாக சற்றே பெரிய 'பக்கீஸ்' பெட்டியில் சீயக்காய் இருக்கும்.


## Life in the UK பரீட்சை உதவி வகுப்புகள் - Lewisham

**ஒவ்வொருவரின் கற்றல் திறமைகளும் வேறுபடுவதால் அவரவர் ஆற்றலுக்கு ஏற்ப வகுப்புகள் நடைபெறுகின்றன. கணனியில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. உங்களுக்கு வசதியான நேரத்தை தெரிவுசெய்து தனி வகுப்புகளை ஒழுங்கு செய்து கொள்ளலாம். துரித மிட்டல் வகுப்புகளும் உண்டு.**




**தொடர்புகளுக்கு: பிரபா, Tel: 07749 051 394**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்கு இலண்டன் பாடசாலையின் 24-வது ஆண்டுவிழா

குறொய்டன் தெற்கு இலண்டன் பாடசாலையின் 24வது ஆண்டுவிழா சென்றமாதம் 16ம் திகதி குறொய்டன் ∴பெயர் பீல்ட் மண்டபத்தில் நடைபெற்றது.
மாலை 5.30 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும் என்று அறிவித்ததுபோலவே நிகழ்வுகள் ஐத்தரை மணிக்கு ஆரம்பமாயின. சிறியவர்களின் நிகழ்ச்சிகள் ஆரம்பத்திலும் வளர்ந்தவர்களின் நிகழ்ச்சிகள் இறுதியிலுமாக ஒன்றின் பின் ஒன்றாக நிகழ்ச்சிகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தமையால் சிறிது சிறிதாகவே நிகழ்ச்சிகள் சூடுபிடிக்கத் தொடங்கியது.
முதன்மை விருந்தாளராக குறொய்டன் உதவி நகரபிதா பிறாயன் ஊடெல் அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார். சிறப்பு விருந்தினராக ஊடகவியலாளர் விமல் சொக்கநாதன் அவர்கள் கலந்துகொண்டார்.
வாத்திய இசை, குரலிசை, நடனம், மிருதங்கம். நாடகம் என்று நிகழ்ச்சிகள் கோலாகலமாகவும் சிறப்பாகவும் நடைபெற்றன. நிகழ்ச்சி தொகுப்பு மாணவர்களாலேயே வழங்கப்பட்டது மிகவும் பாராட்டுக்குரியதாகும்

முன்னைய ஆண்டு விழாக்களிலும் பார்க்க இம் முறை சில நல்ல மாறுதல்களை அவதானிக்கக் கூடியதாய் இருந்தது. கடந்த கால விழாக்களில் இதிகாச கதைகளே பெரும்பாலும் கலை, இலக்கிய படைப்புகளில் வேரூன்றி இருக்கும். ஆனால் இம்முறை புறநானூற்றுக் கதையான வீரத்தாய் இடம்பெற்றிருந்தது படைப்பாற்றல்கள் காலத்தின் தேவைக்கு ஏற்ப முன்னெடுக்கப்பட ஆரம்பித்துள்ளது என்பதைக் எடுத்துக் காட்டுகிறது. இது பாராட்டப்பட வேண்டியதாகும். வீரத்தாயாக நடித்த மாணவி உணர்வுபூர்வமாக நடித்திருந்தார்.

ஒரு தரமான நல்ல படத்திற்கு திறமையான நடிகர்கள், இயக்குனர்களுடன் கதையும் அவசியம் என்பதுபோல, தத்தரூபமாக செய்யப்பட்ட நடனங்களும் மக்களின் வாழ்வியலை பின்னணியைக் கொண்டதாக அமையுமானால் மேலும் சிறப்பாய் இருந்திருக்கும்.
இன்றைய கணினிஉலகில் மொழி மற்றும் பண்பாட்டு விழுமியங்கள் மறைந்து அழிந்து போவதற்கு சந்தர்ப்பங்கள் அதிகமாகவே இருக்கிறன. ஆகவே எமது கலை கலைாச்சார திறமைகளை புலம்பெயர் மண்ணில் அழிந்துபோகாமல் தக்கவைப்பதற்கு அவை சமூகம் நோக்கி திருப்பப்படுதல் அவசியமாகும்.
தெற்கு இலண்டன் பாடசாலை திறமைவாய்ந்த ஆசிரியர்களையும், அவர்களுக்கு வழி காட்டலையும் ஆதரவையும் வழங்கக்கூடிய நிர்வாகக் குழுவையும், கடுமையாக உழைக்கும் தலைமை ஆசிரியரையும் கொண்டிருப்பதுடன். நல்ல மாணவர்களையும் அவர்களை ஊக்குவித்து செயல்பட வைக்கக்கூடிய வைராக்கியமிக்க பெற்றோர் களையும் தனது சொத்தாக கொண்டுள்ளது. இப் பாடசாலையில் சென்ற ஆண்டு 2007-ம் ஐப்பசி மாதம் நடைபெற்ற கேம்பிறிச் பல்கலைக்கழக சர்வதேச பரீட்சையின் GCE (AS) தமிழ் பரீட்சைக்கு தோற்றிய 5 மாணவர்களும், GCE (AL) பரீட்சையில் 1 மாணவரும் 'ஏ' தரத்தில் சித்தி எய்தி சாதனை படைத்து நல்ல எடுத்தக்காட்டாகும்.
ஒரு மொழியை அல்லது ஒரு கலையை தெரிந்து வைத்துக்கொண்டால் மாத்திரம் ஒருவர் தனது அடையாளத்தை தக்க வைத்துக்கொள்ள முடியாது. அந்த மொழி சார்ந்த மண், இலக்கியம், கலை, பண்பாடுகள் போன்றவற்றை அறிந்துகொள்ளும் போதுதான் முழுமையான உணர்வைப் பெறக்கூடியதாக இருக்கிறது.
புலம்பெயர்ந்து வாழும் பிள்ளைகளுக்கு நாம் மொழி மற்றும் கலையுடன் அவர்களைடைய தாயக பண்பாட்டு விமியங்களையும் புரிந்துகொள்ள களம் அமைத்துக்கொடுத்தால் "நீங்க எனக்குச் செய்த ஒரு நல்ல காரியம் என்றால் என்னைத் தெற்கு இலண்டன் பாடசாலையில் சேர்த்தது தான்" என்று தலைமுறை தலைமுறையாய் சொல்லிக் கொண்டே இருப்பார்கள்.

## மனதை எந்த.... (1ம் பக்க தொடர்ச்சி)

முடியும். இதுவே மனத்தை ஒருமுகப்படுத்தும் பயிற்சியாகும்.

பூமியில் பெட்ரோல் எடுக்கிறோம். அப்படியே பயன்படுத்த முடியாது. கொஞ்சம் சுத்தப்படுத்தி பயன்படுத்தினால் வாகனங்களை ஓட்டலாம். இன்னும் கொஞ்சம் சுத்தப்படுத்தினால் விமானத்தை ஓட்டலாம். மனமும் அது போலத்தான். மனதில் உள்ள அழுக்குகளை அகற்றினால் வாழ்க்கை மகிழ்ச்சியாகவும், அமைதியாகவும் இருக்கும். "புறந்தூய்மை நீரான் அமையும், அகந்தூய்மை வாய்மையால் காணப்படும்' என்றார் வள்ளுவர். அகமும் (மனம்), புறமும் (உடல்) சுத்தமாக இருக்க வேண்டும். இல்லையென்றால் இரண்டும் கெட்டு விடும்.
வாழ்க்கையில் உடையக் கூடாதது மனம். மனம் உடைந்தால் நம்மால் எதையும் சாதிக்க முடியாது. சாதிப்பவர்கள் எல்லாம் சாதனைப் படைப்பதற்குக் காரணம் மனம் உடையாமல் இருப்பதுதான். மன உறுதிக்கு மறுபெயர் வைராக்கியம். சபலம் மனதை அலைக் கழிக்கும். விரதம், நோன்பு போன்றவை வைராக்கியத்தையும், மனஉறுதியையும் வளர்க்கும் நல்ல பயிற்சி முறைகளாகும்.
தலையிலுள்ள பாரத்தை இறக்கி வைக்க சுமைதாங்கி கற்கள் இருப்பதைப் போல மனப்பாரத்தை நல்ல நண்பர்களிடம் மனம் விட்டு பேசி குறைத்துக் கொள்ளலாம். பழையன கழிதலும், புதியன புகுதலும் என்பது வீட்டிற்கு மட்டுமல்ல, மனதிற்கும் பொருந்தும். பழைய கெடுதல்களையும், துரோகங்களையும், ஏமாற்றங்களையும் நினைத்துக் கொண்டே இருந்தால் அதனால் வீணான பிரச்சினைகள்தான் தோன்றும். அடுத்தடுத்து நடக்கும் சம்பவங்களிலும் அதன் தாக்கம் இருக்கும். "குறைவான சுமை, சுகமான பயணம்." இது ரயில் பயணத்துக்கு மட்டுமல்ல, வாழ்க்கைப் பயணத்துக்கும் பொருந்தும்.

மன அழுத்தங்களால் உலகில் தற்கொலைகள் நாள்தோறும் நடந்த வண்ணம் உள்ளன. ஒவ்வோர் ஆண்டும் உலகளவில் பத்து லட்சம் பேர், இந்திய அளவில் ஒரு லட்சம் பேர், தமிழகத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் தற்கொலை செய்து கொள்கிறார்கள். இதில் ஏழை, பணக்காரன் வேறுபாடு கிடையாது. தற்கொலைகளை ஆய்வு செய்து பார்த்ததில் இதற்குக் காரணமாக இருப்பது 80 சதவீதம் மன அழுத்தமே என்று கண்டறியப்பட்டுள்ளது. சரியாகப் புரிந்து கொள்ளாமை மற்றும் தெளிவு இல்லாமை காரணமாக மன அழுத்தம் ஏற்படுகிறது. இதற்கு குடும்பத்தாரிடமோ, நண்பர்களிடமோ கலந்து பேசுவது ஒரு தீர்வாக அமையும். வாய்விட்டு சிரித்தால் நோய்விட்டு போகும். சாவு வீட்டில் கூட வாய்விட்டு அழுதுவிடு என்பார்கள். அதுபோல வாய்விட்டு பேசினால் எத்தகைய மன அழுத்தமும் கரைந்து போகும். வாய்ப்பேச்சு கெட்டவனை நல்லவனாக்கி இருக்கிறது. நல்லவனை வல்லவனாக்கி இருக்கிறது. கோழையையும் வீரனாக்கி இருக்கிறது. குடும்பங்களில் ஏற்படும் கருத்து வேறுபாடுகள் மனப்புழுக்கமாக, மன அழுத்தமாக அடைப்பட்டுக் கிடக்கும் போது வாய்திறந்து பேசி, மனப்புழுக்கத்தை அகற்றி, தென்றல் வீசச் செய்யலாம்.
கடலின் ஆழத்தை அறிந்தாலும், மனத்தின் ஆழத்தை அறிய முடியாது என்பார்கள். அது எத்தனை உண்மை! ஒருவரது மனத்தைக் கணிப்பது என்பது அத்துணை எளிதான காரியம் அல்ல. ஆயினும் "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்கிறோம். ஒருவரைப் பிடிக்கவில்லை என்றால் பார்த்ததுமே நெற்றியைச் சுளித்துக் கொள்ளுதல் என்பது உள்மனத்தின் பிரதிபலிப்பு. நம்முடைய செயல்கள் நம் மனதை ஓரளவுக்கு அடையாளம் காட்டி விடும். இரக்கம், பரிவு, கோபம், ஆச்சரியம், அழுகை, சைகை என்று மனதுக்கு பல மொழிகள் உண்டு. இவை அனைத்துமே மனதை வெளிப்படுத்த பயன்படும் உடல் மொழிகளாகும்.

சிக்மன்ட் பிரோய்டு என்ற மனோதத்துவ நிபுணர், "உள்ளத்துக்குள்ளே ஒளிந்திருப்பது ஒன்றல்ல" எனக் கூறுகிறார். ஒரு மனிதன் சமுதாயத்தில் நடந்து கொள்வது வேறு. நிஜ வாழ்க்கையில் நடந்து கொள்வது வேறு. மனிதனுக்கு நன்றாகவே நடிக்கத் தெரியும். சில சந்தர்ப்ப சூழ்நிலையில் தன்னையும் அறியாது செய்யும் செயல்கள் தன் ஆழ்மனத்தின் அழகை படம் பிடித்துக் காட்டி விடுகிறது.
மனம் நலம் பெற தியானம், இறைவழிபாடு, உடற்பயிற்சி, உணவு முறை, மனநலம் குறித்த கருத்துப் பறிமாற்றங்கள் போன்றவை உதவியாக இருக்கும். மனதைக் காலியாக வைக்கக் கூடாது. "காலியான மனது சாத்தானின் தொழிற்சாலை" என்பார்கள். எனவே, மனத்தை நல்ல சிந்தனைகளால் நிரப்ப வேண்டும். மனத்தை முழுவதுமாக அடக்கி முற்றும் துறந்த முனிவர் நிலைக்குப் போக வேண்டாம். வாழ்க்கையின் வெற்றிக்குத் தேவையான அளவுக்காவது மனநலம் காக்க வேண்டியது அவசியம்.


RESIKA TEXTILES
(குறொய்டன் தமிழினி Cash & Carry கடைக்கு உள்ளே உள்ளது)
309 -311 London Road
Croydon CR0 3PA
சுபமூகூர்த்த பட்டுக்கள், டிசைன் சாறிகள், பார்பி சாறீஸ் மற்றும் லேட்டர்ஸ் சேலைகள், பஞ்சாபிகள், சிறுவர் சிறுமியருக்கான ஆடைகள்
திருமணம் மற்றும் பரதநாட்டியத்திற்கு தேவையான நகைசெட், Fancy பொருட்கள்
£50 க்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு Free Gift
Buy one - get one Free
½ Price Sarees
30% சுடிதார்கள்
Tel: 07931 536 587


SRI SIVASAKTHY ASTROLOGICAL CENTRE
Pandith Laxsmana Shastry
பண்டிதர். லக்ஸ்மன் சாஸ்திரி

மலையாள பகவதி அருள் கொண்டு பார்க்கப்படும்
உலகத்தில் சூரிய, சந்திரன் நவக்கிரக மகிமையினாலே இன்பம் துன்பங்கள், நன்மை தீமைகள் பற்றிய விபரங்களைக் கூறுவார் ஜேதிட நிபுணர் லக்ஸ்மன் சாஸ்திரிகள். நீங்கள் அனேக ஜோதிடர்களிடம் ஜோதிடம் பார்த்திருக்கலாம் இவரை ஒரு முறை சந்தியுங்கள் கைரேகை, பெயர் இராசி, லட்சுமி கடாட்சம், பொருள், அரசியல், உத்தியோகம், கல்வி, வியாபாரம், திருமணம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, காதல் கலியாணம், வீசா என்பன பார்த்துச் சொல்லப்படும்.
நிலம், வீடு, யோகம், அதிஸ்ட நம்பர்கள், கோட் வழக்குகள், எதிரிகளினால் மந்திரம், சூனியம், பேய், பிசாசு, கண்திருட்டி, போன்றவைகளுக்கு பரிகாரம் செய்வார். உடன் சந்தியுங்கள். தமிழ், இந்தி, ஆங்கிலம், மலையாளம் ஆகிய மொழிகள் பேசப்படும், மலையாள மாந்தரீகம் படித்தவர்.
AKILAN ENTERPRISES LTD
274 High Street North
East Ham, London E12 6SA
Tel: 07939 095 099 &
07507 089 785
(OPENING HOURS 9.30AM TO 8.00PM)

உங்கள் அபிமான
வடலியை இப்பொழுது இணையத்திலும் பார்வையிடலாம்
www.vadalee.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் மனித உரிமைமீறல்கள் மோசமடைவதன் வெளிப்பாடு

இலங்கையில் செய்தியாளர்கள் அவர்களது கடமையை செய்யும் போது அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் உறுதியான நடவடிக்கையை எடுக்க வேண்டும். ஊடகவியலாளர்கள் மீது சொல்லாலும் செயலாலும் தாக்குதல் நடத்தும் அரசாங்க உறுப்பினர்கள் மீது பகிரங்கமாக கண்டனம் தெரிவிப்பது முக்கியமாகும். நாட்டில் எங்காயினும் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டால் அது குறித்து விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அரசாங்கம் உத்தரவிட வேண்டும்.

இலங்கையின் வட பகுதியில் ஆயுதப் படைகள் விடுதலைப் புலிகளுடன் யுத்தம் புரிந்து வரும் அதேவேளை நாட்டின் ஊடகவியலாளர்களில் ஒரு பிரிவினர் வித்தியாசமான போராட்டம் ஒன்றில் ஈடுபட்டுள்ளார்கள். செய்தியாளர்கள் என்ற தமது தொழிலை தொடர்ந்து மேற்கொள்வதற்காகவே அவர்கள் இந்தப் போராட்டத்தில் இறங்கியுள்ளார்கள். தொலைக்காட்சி, அச்சு ஊடகம், இணையத்தள வெளியீடு ஆகியவற்றில் பணியாற்றும் ஆண்கள், பெண்கள் சம்பந்தப்பட்ட மூன்று சம்பவங்கள் காரணமாகவே இந்த மோசமான நிலைமை தோன்றியுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களில் பரவிய இந்த சம்பவங்கள் அனைத்திலும் ஊடக செயற்பாட்டாளர்கள் கண்டனங்களுக்கு உட்பட்டதுடன் உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடக உரிமை காப்பு அமைப்புக்கள் ஆத்திரமடைந்துள்ளன.

சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனத்தின் ஆசிய பசிபிக் பிராந்திய பணிப்பாளர் ஜக்குலின் பார்க் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது இலங்கையில் செய்தியாளர்கள் அவர்களது கடமையை செய்யும் போது அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் உறுதியான நடவடிக்கையை எடுக்க வேண்டும். ஊடகவியலாளர்கள் மீது சொல்லாலும் செயலாலும் தாக்குதல் நடத்தும் அரசாங்க உறுப்பினர்கள் மீது பகிரங்கமாக கண்டனம் தெரிவிப்பது முக்கியமாகும். ரூபவாஹினி ஊழியர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் உட்பட நாட்டில் எங்காயினும் ஊடக வியலாளர்கள் தாக்கப்பட்டால் அது குறித்து விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அரசாங்கம் உத்தரவிட வேண்டும்.

கெட்டிகே தாக்கப்பட்ட அதே தினம், ஊடகவியலாளர் எம்.பரமேஸ்வரியின் மத்திய இலங்கையிலுள்ள கம்பளை இல்லம் மீது இனம் தெரியாத குழு ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது. எந்தவொரு பிரஜையையும் குற்றச்சாட்டின்றி தடுத்து வைத்திருப்பதற்கான பரந்த அதிகாரங்களைக் கொண்ட அரசாங்க பயங்கரவாத புலன் விசாரணைப் பிரிவு (Terrorism Investigation Department) கடந்த ஆண்டு பரமேஸ்வரியை 3 மாதங்கள் தடுப்புக் காவலில் வைத்திருந்தது.

நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கென தனிநாடு ஒன்றை அமைப்பதற்காக கடந்த 3 தசாப்தங்களாக போராடி வரும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்ததாகவும் அவர்களுக்கு உதவியதாகவும் பரமேஸ்வரி மீது குற்றம் சாட்டப்பட்டது. ஆனால் அவரைக் கைது செய்தவர்களால் அவர் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க முடியாமல் போனதையடுத்து அவர் நீதிமன்ற உத்தரவின் பேரில் விடுவிக்கப்பட்டார்.

தாம் புலிகளுக்கு உதவுவதாக தமது கிராம மக்கள் கூறிவருவதால் தமது குடும்பத்தினரை சிலர் பயமுறுத்தி வருவதாக பரமேஸ்வரி கூறுகிறார். பரமேஸ்வரி விடுதலை செய்யப்பட்டதிலிருந்து அவரது பாதுகாப்புக் காக அவர் கொழும்பிலேயே வசித்து வருகிறார்.

இதேபோன்று, அண்மையில் 5 ஊடக வியலாளர்கள் கைது செய்யப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. பெரும்பான்மை சிங்களவர்களும் சிறுபான்மை தமிழருமான இந்த 5 ஊடகவியலாளர்களும் தற்போதைய இனப்பிரச்சினை சம்பந்தமாக நடப்பு நிகழ்வுகள் பற்றிய செய்திகளை வெளியிடும் “Outreachsl.com” என்ற இணையத் தளத்துடன் தொடர்புகளை வைத்திருந்தமைக்காக கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. பயங்கரவாத புலன் விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்த 5 பேரில் மதிப்பு வாய்ந்த சுயாதீன ஆங்கில வாரப் பத்திரிகையான சன்டே ரைம்ஸின் பத்தி எழுத்தாளர் ஜயபிரகா‘ திஸ்ஸநாயகமும் இணையத்தளத்தின் ஆசிரியரும் அடங்குவர். திஸ்ஸநாயகம் இணையத்தளத்துடன் தொடர்புள்ள மற்றும் நால்வருடன் கடந்த மாதம் 7 ஆம் திகதியிலிருந்து பயங்கரவாத புலன் விசாரணைப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். உத்தியோகபூர்வமாக குற்றச்சாட்டு எதுவும் இன்னமும் சுமத்தப்படவில்லை. சட்ட ஆலோசனை பெறுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. விடுதலைப் புலிகளுடன் தொடர்பு உள்ளதால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று கொழும்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. புலிகளிடமிருந்து நிதி பெற்றதாக அல்லது அவர்கள் சார்பில் செயல்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்கள் இதை கண்டித்துள்ளன. இணையத்தளத்தை நடத்துவதற்கான நிதி சட்டபூர்வ வட்டாரங்களிலிருந்தே பெறப் பட்டதாக இந்த ஊடகங்கள் தெரிவிக்கின்றன. குடுஜஊவு எனப்படும் பரிசில் தலைமை அலுவலகத்தைக் கொண்டுள்ள எல்லைகளற்ற நிருபர்கள் என்ற அமைப்பு இந்த இணையத்தளத்திற்கு தாமே நிதி வழங்கியதாக தெரிவித்துள்ளது. இணையத் தளத்தை நடத்துவதற்காக 2007 ஆம் ஆண்டு நவம்பரில் 12,000 யூரோவை (18,800 அமெரிக்க டொலர்) திஸ்ஸநாயகம் பெற்றுக் கொண்டதாக பரிஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

யுத்த நிலைமையை மாற்றுவதற்கான முயற்சிகளுக்கு நிதியளிக்கும் குடுஜஊவு அமைப்புக்கு ஜேர்மன் அபிவிருத்தி நிறுவனம் ஒன்று ஆதரவளித்து வருகிறது. இந்த செய்தியாளர்கள் விடுதலைப் புலிகளிடமிருந்து நிதி பெறுவதாக பயங்கரவாத தடுப்பு பிரிவுப் பொலிஸார் குற்றம் சாட்டுகின்றார்கள். ஆனால் விசாரணை நடத்திய பின்னர் ஜேர்மன் நிறுவனமும் வெளிநாட்டில் வதியும் தமிழர்களும் இவர்களுக்கு நிதியளித்தார்கள் என்பதை தங்களால் உறுதிப்படுத்த முடியுமென எல்லைகளற்ற நிருபர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது. இந்த செய்தியாளர்கள் ஆரம்பத்தில் ஒப்புதல் வாக்குமூலத்தை பெறுவதற்காக கடுமையாக தாக்கப்பட்டமை குறித்து தாம் கண்டனம் தெரிவிப்பதாகவும் இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

உண்மையில், அரசியல் யாப்பு விவகார அமைச்சு, தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு ஆகிய இரண்டு அமைச்சுக்களும் சமாதான முயற்சிகளை ஒருங்கிணைக்கும் செயலகமும் குடுஜஊவு அமைப்பின் முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்ட பல திட்டங்களுக்கு பகிரங்கமாக ஆதரவு தெரிவித்துள்ளன.

தடுத்து வைக்கப்பட்ட 5 பேரில் ஒருவரான வி.ஜசிகரன் கிழக்கிலங்கையில் மாணவர்களுக்கு உதவுவதற்காக ஜேர்மனியில் வசிக்கும் தமிழர்களிடமிருந்து நிதியுதவி பெற்றுள்ளார் என்று எல்லைகளற்ற நிருபர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது. இலங்கையில் ஏற்கனவே மோசமடைந்துள்ள மனித உரிமை பேணல் விவகாரம் மேலும் மோசமடைவதையே ஊடகவியலாளர்கள் மீதான தற்போதைய தாக்குதல்கள் எடுத்துக் காட்டுகின்றன.

உதாரணமாக, 2006 ஆம் ஆண்டில் எல்லைகளற்ற நிருபர்கள் அமைப்பு வருடாந்த ஊடக நிலைமை பற்றி மேற்கொண்ட மதிப்பீட்டில் இலங்கை 141 ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டிருந்தது. யுத்த நிறுத்தம் அமுலில் இருந்த 2002 ஆம் ஆண்டு மதிப்பீட்டில் இலங்கை 51 ஆவது இடத்தில் இருந்தது. எவ்வாறாயிலும், அரசாங்கம் யதார்த்தத்தை வேறுவிதமாக நோக்குகிறது. நாட்டில் பூரண ஊடக சுதந்திரம் அனுபவிக்கப்படுகிறது என்று ஜனாதிபதி ராஜபக‘ வலியுறுத்திக் கூறினார். ஆங்காங்கே சில சம்பவங்கள் இடம்பெற்றால் அதற்கு அரசாங்கம் பதிலளிக்க வேண்டிய கடப்பாடு இல்லை என்றும் அவர் தெரிவித்ததாக அரசாங்க ஆங்கில தினசரியான டெய்லி நியூஸ் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

- ஐ.பி.எஸ். நன்றி: தினக்குரல்

## பாவத்தின் சம்பளம்

மனிதகுலத்தை மீட்கவென்று சிலுவையில் அறையப்பட்டு மரணத்தை யேசு அரவணைத்த கதை இன்னும் முடியில்லை. பெரிய வெள்ளி தினமன்று, ஆண்டுக்கு ஆண்டு அதை நாம் நினைவுகூர்ந்து பிரார்த்தனைகளில் ஈடுபட்டு வருகின்றோம். ஆனால் பிலிப்பைன்ஸ் நாட்டவர்களோ, எம்மையெல்லாம் மிஞ்சி, பல படிகள் மேலே போய்விடுகின்றார்கள். கடந்த பெரிய வெள்ளி தினமன்றும், தமது வழமையான செய்ற்பாட்டில் இருந்து இவர்கள் விலகவில்லை. இவர்களில் சிலர்,தம்மையே சிலுவையில் அறைந்து கொண்டு, இந்த நாளில் சிலுவையில் தொங்கியிருக்கின்றார்கள். இந்த நிகழ்வை நேரில் பார்ப்பதற்கு, உலக நாடுகள் பலவற்றில் இருந்து பெருந்திரளானவர்கள் வந்து கூடியிருக்கின்றார்களாம். யேசுபிரான் சிலுவையைச் சுமந்து கல்வாரி மலைமீது சென்றபோது முதுகில் சவுக்கடி வீழந்திருக் கின்றது. இவர்களும் சிலுவையில் தொங்கு முன்பாக சவுக்கடி வாங்குகின்றார்கள். இங்குள்ளவர்கள் தமது பாவங்களுக்குப் பரிகாரமாக, சவுக்கடிகளை வாங்குவதையோ அல்லது, கைகளில் ஆணிகள் அடித்து சிலுவையில் ஏற்றப்படுவதையோ முழு மனதோடு ஏற்றுக் கொள்கின்றார்கள். இந்தத் தடவை, இங்குள்ள பத்திரிகை, இந்த நிகழ்வுகளில் நோய்எதிர்ப்பு மருந்துக் கலவைகளில் ஊறப்பட்ட ஆணிகளையே உபயோகிக்க வேண்டும். அடிக்க உபயோகிக்கப்படும் சவுக்குகளையும் கவனிக்க வேண்டும் என்று எச்சரித்துள்ளது. இங்குள்ளவர்களில் சிலர், வருடாவருடம் தொடர்ந்து, சிலுவையில் தொங்கி தம்மைச் சித்திரவதைக்கு உள்ளாக்கி வருகின்றார்கள். இங்குள்ள ஒரு வியாபாரி, 15வது



தடவையாக(இந்த ஆண்டுதான் கடைசித் தடவையாம்), ஆணிகள் அறையப்பட்ட நிலையில், இந்த ஆண்டு சிலுவையில் தொங்கியிருக்கின்றார். தன் தாயின் புற்றுநோயை இறைவன் குணப்படுத்தி விட்டாராம் என்பதற்கு நன்றிக்கடன் இதுவாம். காலில் செருப்புடன் காணப்படும் இவரது தலையில் முள்முடி வைக்கப்பட்டு, பின்பு சிலுவையில் வைத்து கால்களிலும், கைளிலும் ஆணிகள் அறைந்துள்ளார்கள். இந்த வருடம், நால்வர் சிலுவையில் அறையப்பட்டுள்ளார்கள். இப்படியும் ஒரு தெய்வபக்தி.


மாருதி Maruthy Cash & Carry

இலங்கை இந்திய உணவுப் பொருள்கள் கடலுணவு வகைகள் பசுமையான மரக்கறி வகைகள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், பாத்திர வகைகள். தமிழ், இந்தி சினிமா, DVD, CD, VHS போன்றவற்றை பெறுவதற்கு நாடவேண்டிய இடம் மாருதி Cash & Carry



கடல் கடந்து வாழ்கின்ற உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவதற்கும் அழையுங்கள்.... 020 8905 7765

MARUTHI CASH & CARRY
15-17 Queensbury Station Parade
Queensbury
HA8 5NR

Tel: 020 8952 6655
020 8381 3442
Fax: 020 8905 7546


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்புப் பணம்

ஏ.ஜே.ஞானேந்திரன், பாசல் சுவிஸ்

கறுப்பு என்றதும், நம் மனதில் நல்ல எண்ணங்கள் எழுவதில்லை என்றே சொல்ல வேண்டும். கறுப்பு என்பது வாழ்வின் இருண்ட பகுதியைக் குறிக்கின்றது என்பது போலாகி விட்டது. கறுப்புக் கொடிகள் அரைக் கம்பத்தில் பறந்தால், மரணத்தையே அது குறிக்கின்றது. இத்தாலியிலும், கிரேக்க நாட்டிலும், பெண்கள் விதவைகளாகி விட்டால், தமது எஞ்சிய வாழ்க்கை முழுவதும் கறுப்பு ஆடைகளையே அணிவதைப் பழக்கத்தில் கொண்டிருந்துள்ளார்கள். மேற்கத்திய நாடுகளில், மரணச் சடங்குகளில் பங்குபற்றும்போது, கறுப்பு ஆடைகளையே அணிவது வழக்கம்.

1970ம் ஆண்டு, கறுப்பு செப்டெம்பர் என்பது, அரபு நாட்டவர்களின் சரித்திரத்தில், ஒரு மறக்க முடியாத, சோகமான மாதம். இந்த மாத ஆரம்பத்தில், அன்றைய யோர்தான் நாட்டு மன்னரைக் கொல்ல எடுத்த பல சதி முயற்சிகள் தோற்றுப்போயின. ஆத்திரமுற்ற அரசு, தனது இராணுவப் படை மூலம், பாலஸ்தீனிய அமைப்பை மூர்க்கத்தனமாகத் தாக்கியது. இந்த மோதலில் இருபக்கமும் இறந்தவர்கள் தொகை 7000 தொடக்கம் 8000 வரை இருக்குமமென்று கணித்தார்கள்

1983ம்ஆண்டு கறுப்பு ஜூலை என்பது, நம்மவர் சரித்திரத்தில் கறைபடிந்த ஒரு மாதமாகி விட்டது. இந்த மாதம் 23ந்திகதி, சிங்கள அரசு ஏவிவிட்ட காடையர்களின் வெறித் தனமான தாக்குதலால், பல தமிழர்கள் அநியாயமாய் கொல்லப்பட்டார்கள். பல்லாயிரம் வீடுகள் எரித்து அழிக்கப்பட்டன. உடைமைகள் சூறையாக்கப்பட்டன.

கறுப்பு மரணம் என்று அழைக்கப்பட்டது, 14ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், பிளேக் நோயால் சம்பவித்த , மில்லியன் கணக்கான மரணங்களைக் குறிப்பது. மத்திய ஆசியாவில் ஆரம்பித்து, 1340களில் ஐரோப்பாவிற்கும் இந்தப் பிளேக் நோய் பரவியது. உலகளாவியரீதியாக மரணித்தோர் தொகை 75மில்லியன் என்று சொல்லப்படுகின்றது.

கூட்டத்தில் நம்மைக் கறுப்பு ஆடு என்று யாராவது கூறமுற்படடால், நாம் வேண்டப் படாதவராகி விட்டோம் என்றே அர்த்தம் கொள்ளுதல் வேண்டும். ஆபிரிக்காவில் உள்ள கறுப்பு மந்திரவாதிகள் மகா பயங்கரவாதிகள். பில்லி சூனியம் மூலம், இன்னொரு இடத்தில் இருப்பவரைக் கொல்லக் கூடியவர்கள். கறுப்பு விதவை என்பது, உயிரைப் பறிக்கும் ஒரு சிலந்தி இனம். உலக நாடுகளெங்கும் இது காணப்படுகின்றது. முபைெ ஊழடிசய எனபப்படும் நாகபாம்பிற்கு அடுத்ததாக உலகின் மிகப்பெரிய பாம்பினம் டீடயஉம ஆயஅடிய . ஆபிரிக்காவின் மிகப்பெரிய நச்சுப்பம்பினம் இதுதான். பாம்புகளில் மிக



வேகமாக ஓடக்கூடிய மம்பாவிலுள்ள நஞ்சு, நன்கு வளர்ந்த 20 தொடக்கம் 40 வரையிலானவர்களைக் கொல்லப் போதுமானது என்கிறார்கள்.

கறுப்புச் சந்தை, கறுப்புப் பட்டியல், Black Mail, Black Comedy என்று கறுப்பின் மகிமைகள் நீள்கின்றன. இத்தோடு இந்தப் பட்டியலை நிறுத்திக் கொண்டு, கறுப்போடு இணைந்த பணம் பற்றி சற்றே நோக்கு வோமா?

கொழுத்த பணக்காரர்கள், தமது வருமானத்தை அரசுக்குக் காட்டி வரி செலுத்த விரும்பாமல், இன்னொரு நாட்டின் வங்கியில்,தமது பணத்தைக் கள்ளப் பணமாக முடக்குவது என்பது, இன்று சர்வசாதாரண மான நிகழ்வாகி விட்டது. இப்படியான கள்ளப் பணத்தை, இரு கைகளையும் நீட்டி வாங்கி, தமது வங்கிகளில் பதுக்கவென்று பல நாட்டு வங்கிகள் ஆவலோடு காத்திருக்கின்றன.

குட்டி நாட்டுக்குள் ஒரு குட்டி நாடாகத் திகழும், சுவிஸ் நாட்டிலுள்ள லிக்டன்ஸ்டைன் என்ற குட்டிநாடு, இந்தக் கறுப்புப் பண விவகாரத்தில் இன்று அடிபட்டுப் போயிருக்கின்றது. 35,000 பேரை மட்டுமே கொண்ட இந்தக் குட்டிநாடு, கறுப்புப் பணப் பதுக்கலால், ஐரோப்பாவின் கறுப்பு வெள்ளாடாக மாறியுள்ளது என்றும் சொல்லிவிடலாம். அயல்நாடான ஜேர்மனி, இந்த நாட்டை ஒரு நேர்மையற்ற நாடு, கள்வர்களின் குகை என்றெல்லாம் வசைபாடியிருக்கின்றது.

என்னதான் நடந்தது?

ஏறத்தாழ 6 பில்லியன் டாலர் பெறுமதியான பணத்தை ஜேர்மனியர்கள் பலர், இந்த நாட்டின் வங்கிகளில் பதுக்கியிருப்பதுதான், இரண்டு அரசுகளுக்குமிடையில் முறுகல் நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது. நியாயமாக இந்தப் பணம், ஜேர்மன் வங்கிகளுக்குப் போயிருக்க வேண்டும். அரசுக்கு இதற்கான வரி செலுத்தப்பட்டிருக்க வேண்டும். ஜேர்மன் நாட்டு புலனாய்வு அதிகாரிகள் 7 மில்லியன் டாலர் தொகை கொடுத்து, இந்த வங்கியின் ஒரு முன்னாள் அதிகாரியைக் கைக்குள் போட்டுக் கொண்டதில், இங்கு வங்கிக் கணக்கு வைததிருப்போரின் பட்டியல் அடங்கிய குறுந்தகடொன்றைக் கைப்பற்றி யிருக்கின்றார்கள்.. ஒரு டாலர் மதிப்புடைய ஒரு குறுந்தகடின் விலை, அதற்குள் பதியப்பட்ட முக்கிய தகவல்களால், 7 மில்லியனாகி இருக்கின்றது. ஆர்வமுடைய நாடுகளுடன், இத் தகவலைப் பகிர்ந்து கொள்வதாக, ஜேர்மன் அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

ஜேர்மன் அரசின் தாக்குதலை, இந்தக் குட்டிநாடு எப்படி எதிர்கொள்கின்றது? தனது சரித்திரத்தின் பெரும்பான்மையான காலகட்டத்தில், லிக்டன்ஸடயின் ஒரு பணக்கார நாடாக இருந்திருக்கவில்லை. 1868இல் 80பேர் கொண்ட தமது இராணுவத்தையே கலைத்து விடும் நிலைக்கு, இந்தக் குட்டி அரசு முடிவெடுத்தது, இதன் பணமுடையை, நன்றாகவே அன்று பறைசாற்றியது. கடந்த 20 தொடக்கம் 30 வருடங்களில்தான், நாட்டின் நிதிநிலைமை முன்னேற்றம் கண்டுள்ளது என்கிறார் இங்குள்ள ஓர் உயர் அதிகாரி. அதுவும் இந்த வங்கிகளின் புண்ணியத்தால்தான் என்கிறார்

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

**Life in the UK பரீட்சை உதவி வகுப்புகள்**

**Lewisham**

பிரித்தானிய குடியுரிமை பெற Life in the UK என்னும் பரீட்சையில் சித்தி அடைந்து இருக்கவேண்டியது அவசியமாகும். இதற்கான வகுப்புகள் லூாசியத்தில் (Lewisham) இரு இடங்களில் நடைபெறுகின்றன.

ஒவ்வொருவரின் கற்றல் திறமைகளும் வேறுபடுவதால் அவரவர் ஆற்றலுக்கு ஏற்ப வகுப்புகள் நடைபெறுகின்றன. கணனியில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. உங்களுக்கு வசதியான நேரத்தை தெரிவுசெய்து தனி வகுப்புகளை ஒழுங்கு செய்து கொள்ளலாம். துரித மிட்டல் வகுப்புகளும் உண்டு. விரும்பினால் உங்களுக்கு தேவையான பகுதியை மாத்திரம் படித்துக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: பிரபா Tel: **07749 051 394**

**Perma**

*International Shipping Ltd*

*Shipping & Airfreight Worldwide Destinations*
*Traveling & Ticketing*
*Import & Export*
*Packing & Crating*
*Collection & Delivery*
*All sizes &Weights*
*Immediate & Insurance Cover*
*Complete Documentation Service*

- இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூருக்கு விசேட கழிவு
- ஏற்றுமதி
- இறக்குமதி
- களஞ்சியப்படுத்துதல்
- ஒழுங்குகள் செய்தல் யாவற்றிற்கும்

திறந்த **Car Park**
பிரமாண்டமான களஞ்சியம்

உங்கள் பொருட்களை இங்கு வந்தும் Pack செய்துகொள்ளும் வசதி உண்டு
உங்கள் இல்லம் வந்து Collcect செய்யும் சேவை உண்டு

- உங்கள் தனிப்பட்ட பாவனைப்பொருட்கள்
- வாகனங்கள்
- வீட்டுப் பாவனைப்பொருட்கள்
- இயந்திர உபகரணங்கள்

**Over 35 Years Experience**

**Door to Door or Door to port service**

Web: www.permainternational.co.uk
E-mail: info@ permainternational.co.uk

*COLLECTION POINTS*
* Milton Keynes
* North London
* East London

இங்கிலாந்தின் எப்பகுதியாயினும் உங்கள் பொருட்களை எம்மால் சேகரித்து பாதுகாப்புடன் வைத்திருந்து அனுப்ப முடியும்

தாயகத்திற்கோ பிற நாடுகளுக்கோ பொருட்களை அனுப்ப விரும்புகிறீர்களா? தரமான, பிரத்தியேக சேவைக்கு நாடவேண்டிய இடம்

தொடர்புகளுக்கு............ மோகன், பேர்சி, சிவம்

**45C Crusoe Road, Mitcham, Surrey CR4 3AL**
**Tel: 020 8646 5222, Fax: 020 8646 5557, Mobile: 07939550397**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓம் ஸ்ரீகருமாரி அம்மன் ஜோதிட நிலையம்

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள SB லக்ஷ்மணாராஜு குருஜு Aadivasi General Secretary (Face Reading) Durga Poojari திருமதி சுபலக்ஷ்மி அவர்கள் கைரேகை, முகநாடி, ஆகியவற்றைக் கொண்டு துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை பற்றிய விபரங்களை தமிழில், தெலுங்கில், ஆங்கிலத்தில் கூறுவார்.



### துல்லியமாக கணித்து பார்க்கப்படும் விடயங்கள் (Astrology)

- ★ கணவன் மனைவி ஒற்றுமையின்மை
- ★ கைரேகை, முகநாடி, வசியப்பொருத்தம், பஞ்சாங்கம் பார்த்தல்
- ★ திருமணயாதகம், குறிப்பு பொருத்தம், வசியம், ஆண். பெண்
- ★ வாஸ்து சாத்திரம், நாட்டில் ஏனைய பிரச்சினைகள்
- ★ தொழில் வியாபார லட்சுமிகரம் விடயமான வசியப்பொருத்தம்
- ★ எதிரிகள், கண்திருக்ஷ்டி , கோட் வழக்குகள்
- ★ வாகனப்பொருத்தம் லட்சுமி வசீகரம்
- ★ பெண்பிள்ளைகள் ஒற்றுமையாக பெற்றோருடன் நிலைத்திருத்தல்
- ★ பிரிந்தவர் ஒன்றுகூடுதல் எங்கு இருந்தாலும்
- ★ கிரகப் பிரவேக்ஷம் - லட்சுமி பூசை- குரு பூசை



ஆகியவை நல்ல முறையில் கணித்தும் பூசை செய்தும் விபரங்கள் குருஜி ஆசீர்வாதத்துடன் செய்து தரப்படும்.

இவர் நியுசிலாந்து பாரீஸ், ஜேர்மனி, சிங்கப்பூர், மலேசியா, சுவிஸ் மற்றும் பல உலகநாடுகள் எங்கும் விஜயம் செய்துள்ளார்.

**F.C.C Super Store**
**Manor Park,**
**244-246 High Street North,**
**London E12 6SB**

**Mobile:**
**07852 506 993**
**07983 204 697**
**020 8470 6564**



# LAKSHMIS JEWELLERS



வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இதயபூர்வமான இனிய தமிழ்ப்புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



**22 கரட் தங்க நகைகள்**
**உங்கள் எண்ணம்போல்**
**இலண்டனில் தரமான**
**தங்கத்திற்கு நாடுங்கள்**

**276 High Street North**
**Eastham**
**London E12 6SA**
**Tel: 020 8470 5600**
**Fax: 020 8470 3448**












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# SURYA JEWELS

பிரித்தானியா, ஐரோப்பா மற்றும் தாயகத்தில்
வாழும் அனைத்து மக்களுக்கும்
எமது இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்

மலிவான விலையில் தரமான தங்கத்திற்கு ஈஸ்ட்காமில் சூர்யா

உங்கள் பழைய பவுண்களைக் கொடுத்து புதிய நகைகள் வாங்கலாம். ஓடர்கள் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்



SURYA JEWELS

292 High Street North
East Ham
London E12 6SA

**Tel: 020 8552 2224**

# Thinesh Jewellers & Textiles

## தினேஷ் ஜுவலர்ஸ்&ரெக்ஸ்ரைல்ஸ்

நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதம்



22ct தங்க வைர நகைகளை கண்கவர் வேலைப்பாடுகளுடன் உங்கள் எண்ணம் போல் செய்து கொள்வதோடு பழைய தங்கத்தில் புத்தம் புதிய நகைகளையும் செய்து கொள்ளலாம்.

**இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்**

புத்தாண்டை முன்னிட்டு இறக்குமதி செய்யப்பட்ட புதியரக ஆடைகள் மலிவு விலையில்

276, Lewisham High Street
Lewisham
London SE13 6JZ

**Tel: 020 8613 9569**

# அம்பாள் ஜுவல்லர்ஸ்

- உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் உயர்ரக டிசைன்கள் உங்கள் எண்ணத்தை நிஜமாக்கி ஜெலிக்க வைக்கும் நேர்த்தியான தங்க நகைகள்
- கலை வண்ணத்தைப் பிரதிபலிக்கும் புத்தம் புது நகைத் தேர்வுகள்
- நெஞ்சில் இன்பத்தை விளக்கேற்றும் தங்க நகை அரங்கம் அம்பாள் ஜுவல்லர்ஸ்



Ambaal Jewellers
176 Upper Tooting Road
Tooting
London SW17 7ER
Tel: 020 8672 9955
Fax: 020 8672 7097

# EVEREST CURRY KING

**சுத்தம், சுவை, தரம்**

இவைகளுக்கு மறுபெயர் எவரெஸ்ட்...

நண்டு, இறால், கணவாய், சுறா, மீன், நெத்தலி போன்ற கடல் உணவுகளை பல சுவையில் சுவைத்து மகிழ்ந்திட..



**24 Loampit Vale**
**Lewisham**
**Tel : 020 8691 2233**

# EELAM SHOP ஈழம் கடை

399 Lewisham High Street, London SE13 6NZ

ஈழம் கடை ஸ்தாபனத்தினர் தமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றார்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ்கற்கும் மாணவர் பக்கம் வாசகர் போட்டி

**பிள்ளைகளின் தமிழ் மொழி, தமிழ்த் தாயகஉணர்வு, பண்பாடு ஆகியவற்றை வளர்க்கக் கூடிய போட்டிகள், கட்டுரைகள், கவிதைகள் என்பனவற்றை இப்பத்திரிகை வரவேற்கின்றது.**

## சொற்களைத் தேடுதல்

கீழுள்ள எழுத்து வலையில் 64 சொற்கள் பின்னப்பட்டுள்ளன. இவை மேலிருந்து கீழ், கீழிருந்துமேல் , இடமிருந்து வலம், வலமிருந்து இடம் மூலைப்பக்கம் என நேர்கோட்டில் அமையும். நீங்கள் இவற்றைக் கண்டுபிடித்து வளையமிட்டுக் காட்டவும் .

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொ | ப | த் | த | வ் | ஜெ | க | ம | பா | ள | உ | தி | ம | னு | அ |
| ங | ச | ன் | ட | லை | னி | அ | ஓ | ர | று | தீ | வு | று | ல | ஐ |
| கு | மா | க | வா | பி | வா | பி | ர | தி | தி | தி | ர | ங | தி | வ |
| த | தா | க | ம் | வி | டு | மு | றை | தா | கு | உ | கா | மா | ர | வ |
| மி | ன | ய | ள | மா | ம | இ | லை | ச | ள | ர | ண | வா | ன | க |
| மு | ம் | எ | க | ன | க | ய | ர | ன | ம் | லெ | று | மை | தொ | ம் |
| ம | ட | மை | த | ம் | ள் | ண | சி | ளை | டி | லி | ள | ற | ட | த |
| கி | மை | சீ | க | ட் | ச | யு | கா | தே | ம | நா | து | ந் | கு | பே |
| மை | ஓ | ர | எ | கு | மை | ச் | ஆ | ணி | கை | டு | ம் | ழ் | ந் | நீ |
| வா | த | லை | ஆ | வ | னி | ம் | மி | லை | ப் | தா | ட | டு | து | டி |
| அ | ழை | ரா | ந | து | ர | க | தி | ற | ப் | பு | ப | ண் | ட் | டு |
| க | த் | வ | ம் | வு | பே | க் | கு | அ | லெ | மி | தி | வ | ண் | டி |
| தி | ச | ச | தை | ர் | வா | ர் | த் | தை | மை | ள் | க | க் | ம | லெ |
| அ | ச் | சு | பா | ண | ர் | வ | லை | த | ந | தி | ள | ரை | ங | தி |
| அ | பே | மை | ரி | உ | ய | சு | ய | நி | ர் | ண | ய | ம் | எ | மி |

| | | | |
|---|---|---|---|
| விமானம் | சீதனம் | தாயகம் | வருடம் |
| சீமை | விடுமுறை | ஆவணி | அச்சம் |
| நகரம் | மிச்சம் | உணர்வு | சமாதானம் |
| ஆராத்தி | சுவர்க்கம் | பேச்சு | மடமை |
| எருமை | அச்சு | வார்த்தை | வாழை |
| உரிமை | சுயநிர்ணயம் | தேசியம் | போரணி |
| ஓலை | மகிமை | ஆயுள் | இரணைமடு |
| பாரதிதாசன் | உறுதி | பிரதிநிதி | மிதிவெடி |
| கண்காணிப்பு | திறப்பு | அலுவலகம் | பானை |
| மிதிவண்டி | அலங்காரம் | தீர்மானம் | ஜெனீவா |
| பந்தல் | தொடருந்து | மக்கள் | வெளிநாடு |
| களம் | பதாகை | அமைதி | கலாசாலை |
| இலை | படம் | குளம் | கரை |
| கடல் | திருநீறு | வெள்ளம் | அனுமதி |
| உண்மை | வரலாறு | பொங்குதமிழ் | அகதி |
| வண்டு | வட்டி | பேருந்து | தலைவர் |

**பெயர்:** Write in Tamil ..................................................................................

**முகவரி:** Write in English ..........................................................................

........................................... **தபாற் குறியீடு:**...........................................

**தொலைபேசி:**..........................................................................................

இம்மாத சொற்களைத் தேடுதல் போட்டியின் விடைகள் எமது அடுத்தமாத வடலியில் பிரசுரிக்கப்படும். போட்டியாளர்களில் இருவர் குலுக்கல்முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களின் பெயர் விபரங்கள் அடுத்த வடலியில் வெளிவரும்.


அத்துடன் இவ்விருவருக்கும் **Everest Curry King, Lewisham** ஸ்தாபனத்தார் தலா 10 பவுண் வவுச்சர்களை வழங்க உள்ளனர்.

இப் போட்டிக்கான விடைகள் இம் மாதம் **20ம் திகதிக்கு** முன் கிடைக்கும் படியாக கீழுள்ள முகவரிக்கு அனுப்பப்படல்வேண்டும்.

**Vadalee, PO box- 24783, London, SE13 7YE**

*சிறுவர்கள் தங்களின் தமிழ் அறிவை வளர்த்துக்கொள்ள இது உதவியாக இருக்கும் எனும் நோக்கில் ஆக்கப்பட்டுள்ளது. எனவே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இப் போட்டிகளைச் செய்யுமாறு ஊக்கப்படுத்துங்கள். உதவவேண்டாம்.*

## குறுக்கெழுத்துப் போட்டி – 81




இம்மாத போட்டியின் விடைகள் எமது அடுத்தமாத வடலியில் பிரசுரிக்கப்படும். போட்டியாளர்களில் இருவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களின் பெயர் விபரங்கள் அடுத்த வடலியில் வெளிவரும்.

அத்துடன் இவ்விருவருக்கும் **Everest Curry King Lewisham** ஸ்தாபனத்தினர் தலா 10 பவுண் வவுச்சர்களை வழங்க உள்ளனர்

**பெயர்:** Write in Tamil ..................................................................................

**முகவரி:** Write in English ..........................................................................

........................................... **தபாற் குறியீடு:**...........................................

**தொலைபேசி:**..........................................................................................

கீழ்கண்ட குறிப்புக்களைக் கொண்டு காலியாகவுள்ள இடங்களை சரியான சொற்களால் நிரப்பி அனுப்புங்கள். ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது. சரியாக நிரப்பி அனுப்பும் வாசகர்களில் குலுக்கல் முறையில் தேர்வுசெய்து இருவர் தலா 10 பவுண் வவுச்சர்கள் பரிசாக அளிக்கப்படும்.

**இடமிருந்து வலம்**

4. அசிசிகளில் ஒரு வகை ஒருவகை
5. பண்டிகையின் போது பெரிய சத்தத்துடன் கொழுத்தி மகிழ்வது
7. நிலத்தில் வேர் விட்டோ விடாமலோ குழம்போன்ற நீர் நிலைகளில் மிதந்து தண்டோடும் இலைகளோடும் வளர்வது
8. இராகங்களில் ஒன்று
11. போருக்குப் பின்னும் புயலுக்குப் பின்னும் இருப்பது

**வலமிருந்து இடம்**

1. பாரதியின் பின் வந்த ஓர் புரட்சிக் கவிஞர்
3. வழிப்போக்கர்கள் அல்லது தற்காலிக வதிவிடம் வேண்டியவர்கள் தங்குமிடம்
10. சிறு குடம் அல்லது இலண்டனிலிருந்து வெளிவரும் ஓர் சைவ சமய இதழ்
12. குன்று, குழி அற்ற பரந்த நிலப்பரப்பு.
14. எறும்பு ஊர இதுவும் தேயும் என்பது பழமொழி
15. அடுத்தவர் பொருளை அபகரிப்பவர்கள்: நல்லவர்கள் போலும் திரிவர்
16. சிறு தோணி

**மேலிருந்து கீழ்**

1. புராணத்தின் படி பூமிக்கு அடியில் இருப்பதாக நம்பப்படும் உலகம் அல்லது மிக ஆழமான பள்ளம்.
2. வரலாற்றை இப்படியும் அழைக்கலாம்.
9. பரம்பரை அல்லது ஒரு இனத்தின் தொடர்ச்சி.
11. நகலுக்கு எதிர்க் கருத்துடையது: உயர்ந்தது என்றும் பொருள்கொள்ளும்.
13. அறிவு பூர்வமாக புரிந்துகொள்ளவும், விளங்கிடவும் முடியாத ஒன்று.

**கீழிருந்து மேல்**

5. ஒளி அல்லது பிரகாசம்.
6. அரைப் பங்கு.
8. உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்த தமிழ் அன்னை
10. மாமிச உணவிற்குப் பாவிக்கும் ஒரு வாசனைத் திரவியம்
16. மீன் பிடிப்பதற்கான உபகரணம்

(கடந்த போட்டி முடிவுகள் 14ஆம் பக்கத்தில்)

## கறுப்புப் .... (7ம் பக்க தொடர்ச்சி)

இவர்.

1995இல் இங்குள்ள வங்கிகள் ஏறத்தாழ 52 பில்லியன் டாலர் தொகையை நிர்வகித்தன. 2006ம் ஆண்டளவில் இத் தொகை 150 பில்லியனைத் தாண்டிவிட்டது. இந்த வங்கிகளைத் தேடிவரும், கறுப்புப் பணத்தின் தொகை எந்த அளவுக்கு அதிகரிக்கின்றது என்பதற்கு இந்தப் புள்ளிவிபரங்கள் போதாதா?

சரி, அதெப்படி வரிஏய்ப்புப் பணத்தோடு கறுப்பு வந்து ஒட்டிக் கொண்டது?

ஓர் ஏமாற்றுப் பேர்வழியை இன்னொருவர் சந்தித்தாராம். தன்னிடம் இருந்த கறுப்பான பணக்கட்டைக் காட்டி, அதை ஆபிரிக்க நாடொன்றிலிருந்து கடத்தி வந்ததாகவும், , பணத்திற்கு கறுப்பு நிறமூட்டியதால்தான், அதைக் கொண்டு வர முடிந்தது என்றும் அந்த ஏமாற்றுப் பேர்வழி சொல்லியிருக்கின்றான். இவற்றை ஓர் விசேஷ இரசாயணத் திராவகம் ஒன்றில் கழுவினால், கறுப்புப் பணத்தாள்கள் பழைய கோலத்திற்கு வந்து விடும் என்று சொல்லி, கொழுத்த பணத்திற்கு இரசாயணத் திராவகத்தை விற்று, கறுத்த பணக்கட்டையும் கொடுத்திருக்கின்றான். இந்த ஏமாற்றுப் பேர்வழியைச் சந்தித்தவரோ, ஒன்றுக்கு மூன்று பணக்கடடை, அவனிடம் வாங்கிக் கொண்டு சென்றிருக்கின்றார். முடிவில் என்ன நடந்தது? அவருக்குக் கிடைத்ததெல்லாம், வெறும் கறுப்புச் சாயமூட்டிய தாள்கள்தான். இந்த நாளிலிருந்து கள்ளப் பணத்திற்கான பெயர் கறுப்புப் பணமாகி இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'லடாக்' என்னும் இந்தியாவின் குட்டித் திபெத்து

- சி.மாசிலாமணி

இந்தியாவின் கூரை என்று அழைக்கப்படும் ஜம்மு-கஷ்மீர் மாநிலத்தை உண்மையில் ஜம்மு-கஷ்மீர்-லடாக் என்று மூன்று பெயர்கள் சூட்டியே அழைக்க வேண்டும். அந்த அளவுக்கு தனித் தனி சூழல் கொண்ட வெவ்வேறு மூன்று பகுதிகளை உள்ளடக்கியது தான் இந்த மாநிலம்.

மத ரீதியாகப் பார்த்தாலும் இந்துக்கள் அதிகமாக வாழும் ஜம்மு, விரல்விட்டு எண்ணக் கூடியவர்களைத் தவிர்த்தால் முற்று முழுவதும் முஸ்லீம்களைக் கொண்ட கஷ்மீர், 80 வீதத்தினருக்கு மேல் பௌத்தர்கள் வாழும் நகராம் 'லே' யை உள்ளடக்கிய லடாக் பிரதேசம் என்று எளிதில் பிரிக்கக் கூடிய மூன்று பகுதிகள் அங்குள்ளன.

தரை அமைப்பை வைத்தப் பார்த்தாலும், சாதாரண சூழல் கொண்ட ஜம்மு, ஐயாயிரம் அடி உயரத்திற்கு மேல் அமைந்த, செல்வநகர் என்ற அர்த்தத்தில் ஸ்ரீநகர் என்ற பெயர்கொண்ட நகரை தலைநகராகக் கொண்டு அழகிய பள்ளத்தாக்குகளாலும் மலை களாலும், அமரநாத் என்னும் புனித மலையாலும் தன்னை ஒரு சொர்க்க புரிபோல் காட்சியளிக்க வைக்கும் கஷ்மீர், இமயத்தின் பாரிய சிகரங்கள் இரு மருங்கும் சூழ நடுவில் ஓடும் இந்து நதியால் அலங்கரிக்கப்படும் லடாக் பிரதேசம் என மூன்று வெவ்வேறு சூழல்கள்.

இந்த லடாக் பிரதேசத்தைத்தான் நான் குட்டி திபேத்து என்று குறிபிட்டேன். அதற்கு தகுந்த காரணங்கள் உண்டு. என்னதான் இந்து நதி நடுவே ஓடினாலும் இங்குள்ள நிலப்பரப்பு வளம் குன்றி செந்நிறத் தோற்றத்துடன் காட்சியளிக்கின்றது. திபெத்துப் பீடபூமியும் இதே செந்நிறத்துடன் உள்ள வளம் குன்றிய பிரதேசமே. அகன்ற முகம்கொண்ட திபேத்திய இன மக்களே இங்கும் வாழுகிறார் கள். திபேத்து எவ்வளவுக்கு பௌத்த விகாரைகளையும் பௌத்த சின்னங்களையும் கொண்டுள்ளதோ அதே சூழல் இங்கும் காணப் படுகின்றது.

ஜம்மு கஷ்மர் மாநிலத்தின் 22 மாவட்டங்களில் இரு மாவட்ங்களை உள்ளடக்கிய பகுதிதான் இந்த லடாக் பகுதி. இரு மாவட்டங்களுமே பரப்பளவு கூடியவை. 435 கிலோ மீற்ரர்வரை வியாபித்து கிழக்கை அலங்கரிக்கின்றன. காகில், 'லே' ஆகிய இவ்விரு மாவட்டங்களிலும் காகிலில் பௌத்தர்களும் முஸ்லீம்களும் கலந்து வாழ்ந்தாலும் 'லே' 80 வீதம் பௌத்தர்களை உள்ளடக்கிய பிரதேசம். இங்கு வாழும் மங்கோலிய மக்கள் மத்தியில் இருக்கும்போது ஏதோ ஒரு புதிய சூழலில் உள்ள உணர்வே ஏற்படுகிறது.

சிந்து நதியும் இந்து நதியும் ஓடும் இமயத்தின் பள்ளத்தாக்குகள் ஊடாக ஸ்ரீநகரிலிருந்து 'லே' செல்லும் பயணம் நிச்சயம் புதியதோர் பிரமிக்கும் அனுபவத்தை ஏற்படுத்தும். இப்பாதையின் 90 கிலோ மீற்ரர் தொலைவில் உள்ள சொனமாக் பகுதியை மலை ஏறிகளின் சொர்க்கம் என்பார்கள். அங்குள்ள உயர்ந்த கணவாய்களும் ஏரிகளுமே அதற்கு சான்று. வாகனப் பயணியாக அப்பாதை ஊடாகச் செல்பவர்களுக்கு, பனிபடர்ந்த மலைகள் ஊடாக இமயத்தின் நடுவே செல்லும்போது ஒருவகைப் பரவசம் ஏற்படத்தான் செய்யும். சொனமாக்கில் இருந்து 15 கிலேமீற்ரர் தொலைவில் புனித அமரநாத் குகைக்கு யாத்திரை மேற்கொள்ளும் 'பால்தல' அடி வாரம் உள்ளது. ஜூன் பிற்பகுதி யிலிருந்து ஆகஸ்ட்டின் முற்பகுதி வரை ஆண்டில் 60 நாட்கள்தான் யாத்திரைக்கு உகந்த காலம். அந்த குறுகிய காலத்திற்குள்தான் எத்தனை யாத்திரிகர் எத்தனை குதிரைகள் எத்தனை குதிரை உரிமையாளர்கள்? இடமே ஒரு தனிக் களை கட்டும். 'பால்தலை' அடுத்து இந்தப் பாதையின் அதி உயர்ந்த 11,500 அடி உயரம் கொண்ட 'சோஜிஜா' ஊடாகச் செல்கிறோம். அது எப்படியான அனுபவத்தை ஏற்படுத்தும் என்பதை அதன் உயரமே உணர்த்தும். அங்கிருந்து 20 கிலோமீற்ரர் தொலைவில் டிராஸ் உள்ளது. இது மக்கள் வாழும் குளிர் கூடிய பிரதேசங்களில் இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. அடுத்து வரும் நகரம் காகில். இது காகில் மாவட்டத்தின் பிரதான நகரம். பயணம் அரைவாசி முடிந்துவிட்டது. அதாவது 200 கிலோமீற்றர் முடிந்துவிட்டது. இப்போது 'லே' நோக்கிய பயணம் ஆரம்பமாகிறது. மிகுதியான 235 கிலோ மீற்ரரும் மனதைக் கவரும் மலைசூழ் சூழல்தான். ஆனால் நிறம்தான் சற்று சிவக்கின்றது. ஒரு அரைப் பாலை வனச் சூழல்போல் தென்படுகிறது. அங்கு சிறிது தண்ணீர் தட்டுப்பாடு நிலவுகிறது. இது பெரிய பிரச்சனை யாக எதிர் காலத்தில் இருக்காது. இந்து நதியின் உயரக் கிளை ஒன்றை திசை திருப்பி எளிதில் பிரச்சனையை சமாளிக்கலாம்.

ஸ்ரீநகரிலிருந்து வரும் பாதையுடன் கிமாசல பிரதேசத்தின் மணலி என்ற இடத்திலிருந்தும் ஒரு பாதை 'லே'க்கு வருகிறது. இப்பாதையில் முக்கிய பௌத்த தலங்கள் உள்ளன. சே, திக்சே ஆகியவை குறிப்பிடத் தக்கவை. இதைவிட இப்பாதையில் 15,000 அடி உயரத்திற்கு கூடிய கணவாய்கள் உண்டு. இதில் நாம் கவனத்தில் கொள்ளவேண்டியது, என்னதான் இரண்டு பாதைகள் இருந்தாலும் ஒக்டோபர் நவம்பர் ஆகிய மாதங்களிலிருந்து ஏப்ரல் மாதம் முடியும்வரை இவ்விரு பாதைகளும் பனி காரணமாக மூடப்பட்டு வெளி உலகுடன் எதுவித வாகனத் தொடர்பும் இன்றி துண்டிக்கும் சூழல் உள்ளது. ஆகையால் இப்பகுதி மக்கள் கறையான் சேகரிப்பதுபோல் குளிர்காலத்திற்கு தேவையான உணவைச் சேகரிக்காவிடில் அவலத்திற்கு உள்ளாவார்கள். இப்போ ஒரு நற் செய்தி உண்டு. ஆண்டு முழவதும் லேக்கும் டெல்லிக்கும் விமான சேவை உண்டு.

- சி.மாசிலாமணி

## தேடல் வலி...!

முற்றத்துப் பூவரசில் சேவலொன்று
முதற்சாமம் கூவுகுதே துயில் மறந்து
பற்றைகளில் சலசலப்பும் கேட்கவில்லை
பாவியரைக் காக்கவென்றா உறங்குதில்லை
சுற்றத்து உறவுகளும் விலகத் தூரம்
சுதந்திரமாய்க் கூவிடவோ துணிவுமற்று
கற்றவைகள் கடந்தவைகள் மனத்தில் உந்த
கண் விழித்து மனத்திருத்திக் கூவுதங்கே.

தொலைக்காடசிப் பெட்டிகளின் தொடரும் நீள
தொல்லை தரும் சேவையெனப் புரிந்தும் நாளும்
விலை மதிக்கா நேரமதை ஒதுக்கி ஓய்ந்து
விடிவதையும் மறந்தபடி கோழி தூங்க
கலைத்துவிட்ட தூக்கமுடன் சேவல் எல்லாம்
கரையாமல் கூவாமல் எழுந்து ஓடி
மலை போலப் பணம் சேர்க்க ஊண் மறந்து
பாதையெது என்றறியாப் பறக்குதிங்கே.

ஆறறிவு படைத்தவராம் சொல்லும் மாக்கள்
அல்லலுறும் தம் சொந்தம் நிலை மறந்து
தேறிவரும் செல்வமதில் முழுதே மூழ்க
தெருவினிலே தம் பொழதைச் செலவும் செய்ய
முறித்துவிட்ட உறவினைப்போல் அவரின் செல்வம்
முரண்டுபட்ட சங்கமத்தில் தேடிச ்சேர
பறித்ததுவே அமைதியினைக் குடும்பம்தோறும்
பார்த்திருக்கப் பொறுக்குதில்லை அகதிவாழ்வும்.

த.சு.மணியம்.

# விநோதமான ஏலவிற்பனை

மேசையை விற்கின்றார்கள். கதிரையை விற்கின்றார்கள். .இது முன்னொரு காலத்தில் மன்னர் உபயோகத்தில் இருந்தது என்று சொல்லி, ஏலத்தில் போட்டி போட்டுக்கொண்டு பல்லாயிரம் டாலர் தொகை கொடுத்து ஆயிரம் டாலர் கூட பெறுமதியில்லாதவற்றை யெல்லாம் வாங்குகின்றார்கள். சரி ஏதோ அபூர்வமான பொருளிது. பணமிருக்கின்றது. வாங்கட்டுமே என்று மன்னித்து விடலாம். ஆனால் தன்னைத்தானே ஏலவிற்பனையில் விடுபவரை என்ன செய்யலாம்?

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில்தான் இந்த விநோத நிகழ்வு. தன் வாழ்க்கையை- அதாவது தன் வீடுவாசல், தன் தொழில், தனது ஆடைஅணிகள், தனது நண்பர்கள் என்று எல்லாவற்றையுமே ஏல விற்பனைக்கு விட்டுள்ளார் இந்த மனிதர். நம்ப முடியவில்லையா? உண்மைதான். இந்த அவுஸ்தி ரேலியப் பிரஜையின் பெயர் Ian Usher. வயது 44. தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியொன்றில், தான் முற்றிலும் புதிய வாழ்வொன்றை எதிர்பார்த்துக் காத்திருப்பதாகவும், அது தன்னை எங்கே கொண்டு போகப்போகின்றது என்பதை நான் பார்த்தாக வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார் இவர். Perth நகரிலுள்ள தனது வீட்டின் பெறுமதியை அண்ணளவாக



192,186 பவுண்ட்ஸ் என்று மதிப்பிட்டிருக்கின்றார். எதிர்வரும் ஜுன் மாதம் 22ந்திகதி, e-bay எனப்படும் இணைய ஏலவிற்பனை நிறுவனத்தின் மூலம் விற்பனை ஆரம்ப மாகின்றது. இவரது ஏலவிற்பனையில் அதிக தொகை கொடுப்பவருக்கு வீடு. ஒரு கார், ஒரு மோட்டார் ஈருருளி போன்ற வற்றுடன், தனது சிறந்த நண்பர்களின் அறிமுகமும், தரைவிரிப்பு உற்பத்தி நிறுவனத்தில் (இங்குதான் அவர் வேலைசெய்கின்றார்) இரண்டு வாரங்கள் வேலைசெய்து, விரும்பினால் தொடரவும் வாய்ப்பளிக்கப்படும் என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த விற்பனையும், சொத்துக் கைமாற்றமும் முடிந்தபின்னர், நான் வீட்டைவிட்டு வெளியேறி புத்தம் புதிய வாழ்வைத் தொடங்கப் போகின்றேன் என்கிறார் இந்த விசித்திர மனிதர். தன் மாஜி மனைவியின் காதிலும் இந்தத் தகவல் காதில் வீழந்ததாம் என்று கூறும் இவர், தனக்கு கொஞ்சம் மனநோய் என்று இதுபற்றி மனைவி விமர்சித்ததாகக் கூறியுள்ளார். யாருக்காவது இவர் சொத்தை ஏலத்தில் அடைய ஆசையிருந்தால் www.alife4sale .com என்ற இணையப் பக்கத்தில் சென்று மேயலாமே.

இணையத்தில் வடலி
www.vadalee.com

RADIUS SERVICE LTD

For Sales, Service and Repairs of Commercial Refrigeration & Air-Conditioning

உங்களின் அனைத்து குளிர்சாதன உபகரணங்களின் தேவை, மற்றும் பழுதுபார்த்தல் போன்றவற்றிற்கு நம்பிக்கையுடன் நாடவேண்டிய ஒரே இடம்

- Shelving
- Chillers, Freezers
- Air Conditioning systems
- Shop Fitting
- Cold rooms etc.

* Remote Dairy Low Fronted
* Plug in Dairy
* Double Door Chillers
* Jumbo Freezers









Unit: 23-24 Resolution Way
London, SE8 4NT
Tel: 020 8692 0257 / 020 8694 2786

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் வெள்ளத்தின் காரணமாக பல குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதுடன் 1,000 – க்கும் அதிகமான குடும்பங்களின் வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

குறிப்பாக கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களே வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர். அப்பகுதியில் தொடர்ந்து பெய்யும் அடைமழையால் இவர்கள் தொடர்ந்தும் இடம்பெயர்ந்து வருகின்றனர். ஆறுகளும், குளங்களும் நிரம்பி வழிகின்றன. மூங்கிலாறு, நாதனை ஆறு, கிரான் ஆறு, சந்தனமடு ஆறு அமைந்திருக்கும் பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. இதனால் போக்குவரத்துக்களும் துண்டிக்கப்பட்டுள்ளன. மேலும் சில குளங்களும், ஆறுகளும் வெள்ளத்தால் நிரம்பியுள்ளதால் அணைக் கட்டுகள் உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் சில குளங்களின் அணைக்கட்டுகள் திறக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பில் இதுவரை 23,000-க்கும் அதிகமான குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு அரச அதிபர் செயலகம் தெரிவித்துள்ளது.

மண்முனையில் 8,895 குடும்பங்களும் மண்முனை வடக்கில் 5, 500 குடும்பங்களும் ஏறாவூரில் 2,524 குடும்பங்களும் காத்தான்குடியில் 3,385 குடும்பங்களும் மட்டக்களப்பு நகரை அண்மித்த பகுதிகளைச் சேர்ந்த 461 குடும்பங்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு அரச அதிபர் செயலகம் தெரிவித்திருக்கின்றது.

வழக்கத்திற்கு மாறாக இந்த மாதம் 354.8 மில்லி மீற்றர் மழை பெய்திருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட காலநிலை அவதானிப்பு நிலைய அதிகாரி சூரியகுமாரன் தெரிவித்துள்ளார்.

அம்பாறையிலும் வெள்ளத்தின் காரணமாக மக்கள் பெரிதும் பாதிக்கட்டு வருகின்றனர். அம்பாறையில் திருக்கோவில், காரைதீவு , கல்முனை, அட்டாளைச்சேனை ஆகிய இடங்களிலேயே வெள்ளத்தின் பாதிப்பு அதிகமாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

குறிப்பாக கிராமங்களில் உள்ள சிறிய வீடுகள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அப்பகுதி மக்கள் கோவில்களிலும் பாடசாலைகளிலும் தஞ்சமடைந்துள்ளனர். பயிர்ச்செய்கைகள் அனைத்தும் நாசமாகி யிருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அம்பாறையிலும் 20,000-க்கும் அதிகமான குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டுள்ளதுடன் 1,000-க்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அம்பாறையின் சாய்ந்தமருதுப் பகுதியில் மட்டும் வெள்ளத்தால் 6,500 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

கல்முனையிலும் வெள்ளத்தின் பாதிப்பு அதிகரித்து வருவதாக மக்கள் தெரிவித்துள்ளனர். குறிப்பாக மக்கள் இடம்பெயர்ந்து தங்கியிருந்த கல்முனை சாகிரா பாடசாலைக்குள் வெள்ளம் புகுந்திருப்பதால் மக்கள் அவலங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகக் கூறப் படுகின்றது.

இதேவேளை அம்பாறையில் கடும் உணவுத்தட்டுப்பாடும் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் உணவுப் பொருட்களின் விலையும் மிகக் கடுமையாக அதிகரித்து விற்பனை செய்யப்படுகின்றது என்று அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலையிலும் 1,000-க்கும் அதிகமான குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக கரையோரப் பகுதி மக்களும் தாழ்ந்த நிலப்பரப்பில் உள்ள மக்களும் வெள்ளத்தினால் பாதிக்கப் பட்டுள்ளனர்.

குறிப்பாக கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக மூதூருக்கான போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப் படுகின்றது.

வடக்கில்...

யாழ்ப்பாணத்தில் தாழ்ந்த பகுதிகளில் உள்ள மக்கள் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளதுடன் பயிர்ச்செய்கைகள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அத்துடன் கரையோரப் பகுதியை அண்மித்துள்ள உள்ள வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்திருப்பதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. கடல் தொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்லவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் கடும் மழை காரணமாக மாணவர்களின் வரவும் பாடசாலைகளில் மிகக்குறைவாகவே காணப்படுவதாகத் கூறப்படுகின்றது.

மன்னாரில் 11,000-க்கும் அதிகமான குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்செய்கை வெள்ளத்தில் மூழ்கி அழிந்து நாசமாகும் நிலை ஏற்பட்டிருப்பதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர்.

மன்னாரில் நானாட்டான் மற்றும் வங்காலைப் பகுதிகளிலேயே வெள்ளத்தின் பாதிப்பு அதிகளவில் ஏற்பட்டிருப்பதாக மன்னார் பிரதேச செயலாளர் ஸ்ரான்லி டிமெல் தெரிவித்திருக்கின்றார்.


கற்பகம்

மக்கள் மனங்கவர்ந்த தமிழ்க் கடை

☆ Fresh இறைச்சி எப்பொழுதும் கிடைக்கும். பெரிய இறைச்சி ஓடர்கள் செய்யும் போது சகாய விலைக் கழிவுடன் சிறு சிறு துண்டு களாகவும் வெட்டித்தரப்படும்.



☆ புதிய, பழைய சினிமாப் படங்கள் மற்றும் தொடர் நாடகங்கள் எப்பொழுதும் கிடைக்கும்



இலங்கையில் இருந்து தருவிக்கப்பட்ட மளிகைப் பொருட்கள் மற்றும் மரக்கறி வகைகள் மலிவு விலையில் பெறலாம்.

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

தொலைபேசி அட்டைகள், Audio Video VCD DVD ஆகியன மலிவு விலையில் பெற்றுக் கொள்ள கற்பகம் பல்பொருள் அங்காடி.

பங்கு இறைச்சி உட்பட மான் கோழி பன்றி என எல்லா வகையான இறைச்சிகளும் தினசரி கிடைக்கும்

36 Loampit Hill,
Lewisham,London SE13 7SW
Tel: 020 8694 8810





தமிழில் சாரதிகளின் எழுத்துப் பரீட்சை வகுப்புகள்

Theory Test Classes in Lewisham



- Theory Test மற்றும் Hazard Perception Test ஆகியவை இலகுவான முறையில் தமிழில் விளக்கப்பட்டு, கணனிமூலம் பயிற்சிகள் வழங்கப்படுகிறது.
- தனி வகுப்புகள், கூட்டுவகுப்புகள் ஒழுங்கு செய்யலாம்.
- பரீட்சைகளுக்கும் ஒழுங்குசெய்து தரப்படும்

தொடர்புகளுக்கு: வேந்தன் 07749051394






SPICE LAND

FOR THE ASIAN TASTE OF SPICE CURRY

குளிரூட்டப்பட்ட ..... மேலதிக இடவசதி கொண்ட ......

100 இடியப்பம் சம்பல் சொதியுடன் £12 பவுண் மட்டுமே

திருமண வைபவங்கள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள், சமூக ஒன்றுகூடல்கள் போன்ற உங்கள் விருந்துபசார தேவைகள் எதுவானாலும் அதற்கு தகுந்தபடி சுவையான, தரமான உணவுகளை ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

7 days a week
Open 11am to midnight

£15 பவுண்களுக்கு மேல் உணவை வாங்கினால் 3 மைல் எல்லைக்குள் இலவசமாக வினியோகம் செய்யப்படும்

212 LONDON ROAD,
CROYDON,
SURREY CR0 2TE

உங்கள் அனைத்து தொடர்புகளுக்கும்
020 8667 1700
020 8649 8895, 07984 038 757


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிகர் ரகுவரன் காலமானார்

பிரபல நடிகர் ரகுவரன் (49) உடல்நலக் குறைவால் பங்குனி மாதம் 19-ம் திகதி சென்னையில் காலமானார்.
கோவையைச் சேர்ந்த ரகுவரன் 'ஏழாவது மனிதன்' படத்தின் மூலம் திரையுலகுக்கு அறிமுகமானவர். அதன்பிறகு தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி உள்ளிட்ட மொழிகளில் 300 திரைப் படங்களுக்கு மேல் நடித்துள்ளார். மதுப் பழக்கத்துக்கு ஆளான ரகுவரன் சில



வருடங்களுக்கு முன்பு கல்லீரல் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். சிறிது இடைவெளிக்குப் பிறகு மீண்டும் படங்களில் நடித்து வந்த ரகுவரன் நடிகை ரோகிணியைக் காதலித்து திருமணம் செய்துகொண்டார். அவர்களுக்கு ஒரு மகன் உள்ளார். குடும்ப வாழ்க்கையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக ரகுவரனும் ரோகிணியும் பிரிந்தனர்.
சர்க்கரை நோயால் அவதிப்பட்டு வந்த ரகுவரன் அதற்காக சிகிச்சை மேற்கொண்டு வந்தார். இந்த நிலையில் அண்மையில் ரகுவரனின் உடல்நிலை மீண்டும் பாதிப்புக் குள்ளானது. இதையடுத்து சென்னையில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி காலமானார்.

"வில்லன்" இலக்கணத்தை மாற்றியவர்: சினிமாவில் வில்லன்கள் என்றாலே அடிதடி, வன்முறை செய்பவர் என்ற இலக்கணத்தை மாற்றிய முக்கியமான நடிகர்களுள் ரகுவரனும் ஒருவர். இவருடைய படங்களில் இதுபோன்ற காட்சிகள் இடம் பெற்றிருந்தாலும் தன்னுடைய கம்பீரமான குரல், வசன உச்சரிப்பு, உடலசைவுகள் மூலம் சிறப்பான நடிப்பை யதார்த்தமாக வெளிப்படுத்தி வில்லத்தனத்துக்குப் புதிய பரிமாணம் ஏற்படுத்தினார். குணசித்திர வேடங்களிலும் கச்சிதமாக நடிப்பை வெளிப்படுத்தியவர். 90-களில் இவர் நடித்து வெளிவராத படங்களே இல்லையெனும் அளவுக்குத் தொடர்ந்து பல முன்னணி மற்றும் புதுமுக நடிகர்களுடன் ஏராளமான படங்களில் நடித்தார்.

# ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை முன்பாக மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம்

ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை முன்பாக சுவிஸ் வாழ் தமிழர்களால் பங்குனி 17ம்திகதி மாபெரும் கண்டன ஊர்வலமும், கவனயீர்ப்புப் போராட்டமும் நடத்தப் பட்டுள்ளன.



சிறிலங்கா அரசின் பயங்கரவாத நடவடிக்கையால் 06.03.08 அன்று படுகொலை செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் 'மாமனிதர்' கி.சிவநேசனின் படுகொலையைக் கண்டித்தும் தொடர்ச்சியாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் அப்பாவிப் பொதுமக்கள் மீதான படுகொலைகளைக் கண்டித்தும் இக்கவனயீர்ப்புப் போராட்டமும், கண்டன ஊர்வலமும் நடத்தப் பட்டுள்ளன.
நிகழ்வில் "மாமனிதர்" சிவநேசன் மற்றும் படுகொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் படுகொலையைக் கண்டித்து மனுவொன்று அனைத்துலக நாடாளு மன்றத்தின் செயலாளர் நாயகம் கலாநிதி அன்டெர்ஸ் பி.ஜோன்சனிடம் கையளிக்கப்பட்டது.


# வட இலண்டன் திருவருள் என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்

**61-65 Church Lane, Edmonton. N9 9PZ,**
**Tel; 020 884 3333**

**தாயகத்தில் சாந்தி சமாதானம் நிலவிட**
**கோடி அர்ச்சனை விஞ்ஞாபனம்**
**13.03.08 முதல் 20.06.08 வரை 100 தினங்கள்**



**காலை 8.00மணி முதல் இரவு 9.30 மணிவரை ஆலயம் முழுமையாகத் திறந்திருந்து ஒவ்வொரு 30 நிமிடத்திற்கு ஒரு தடைவ பஞ்சமுக அர்ச்சனையாக 20 தடவைகள் இலட்ச நாம அர்ச்சனை நடைபெறும்.**
**20 தடவைகள் நடைபெறும் ஒவ்வொரு பஞ்சமுக அர்ச்சனையும் தனித்தனி குடும்ப உபயமாக நடைபெற உள்ளது.**

**இக்கோடி ஆரச்சனையில் பங்குபற்ற விரும்பும் அடியார்கள் ஆலயக் காரியாலயத்தில் தொடர்பு கொண்டு தாங்கள் விரும்பும் திகதி நேரம் என்பனவற்றைப் பதிந்து இக் கோடி அர்ச்சனை விழாவை சிறப்பிக்கும் வண்ணம் வேண்டுகிறோம்.**


# சைவப்புலவர் பட்டமளிப்பு விழா

இளையவரிடை சைவ அறிவை வளர்க்கும் பரீட்சைகளை ஆவணி முதல் நடத்த சைவத்திருநெறிக்கழகமும் தொடக்கி வைக்கப்பெற்றது

இலண்டனில் முதற்தடவையாக தாயகத்தில் நடைபெற்று வரும் சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவின் 47 வது ஆண்டுப் பட்டமளிப்பு கீரிமலை நகுலேஸ்வர தலைமைக் குரு இராஜராஜஸ்ரீ கு நகுலேஸ்வரக் குருக்களால் சிறப்பாக நடாத்தப்பெற்றது..



இலண்டன் வோல்த்தம்ஸ்ரோ கற்பக விநாயகர் கோவில் முதன்மைக் குரு சைவப்புலவர் சிவஸ்ரீ பாலசர்வேஸ்வரக் குருக்கள் அவர்கள் பட்டமளிப்பு விழாவுக்குத் தலைமை தாங்கினார். அவர் தமது உரையில் சைவம் அறிவுக்கும் ஆன்மீகத்திற்கும் பாலமாக உள்ளது என அழகுற எடுத்துரைத்து சைவக்கல்வியை புலத்து தமிழர்கள் வளர்க்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

சட்டத்தரணி திரு செ சிறிக்கந்தராசா அவர்கள் தனது உரையில் சைவம் குறித்த படிப்புகளும் பரீட்சைகளும் ஆங்கிலத்திலும் நடாத்தப் பட்டாலே புலத்தில் உள்ள இளையவர்கள் அவற்றினை பொருள் விளங்கி கற்றுத் தேறிட இயலும். இதனையும் சைவப்புலவர் சபை கவனத்தில் கொள்தல் வேண்டுமென கேட்டுக்கொண்டார். சைவத் தொண்டர் திரு வ. இ. இராமநாதன் சைவமுன்னேற்றச் சங்க மண்டபத்தில் இப்பட்டமளிப்பு விழா இடம்பெறுவதன் பொருத்தப்பாடு குறித்து எடுத்துக்கூறி புலத்தில் சைவஅறிவினை வளர்க்கும் இத்தகைய முயற்சிகள் சிறப்புற அனைவரும் ஒன்றிணைந்து உழைத்திட வேண்டும் என்றார். ஒலிபரப்பாளர் திரு சிறீரங்கன் அவர்கள் புலத்தில் சைவக்கல்வியினை இளையவர்கள் பெற வேண்டியதன் அவசியம் குறித்து எடுத்து விளக்கி சைவத்திருநெறிக்கழகத்தின் பாடத்திட்டமும் எதிர்வரும் ஆவணி மாதத்தில் நடைபெறவுள்ள சைவத்திருமுறைப் பரீட்சைகளுக்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பமும் அடங்கிய ஐரோப்பிய சைவப்புலவர் பட்டமளிப்பு விழாச் சிறப்பிதழின் முதற் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

அடுத்து பட்டமளிப்புச் சிறப்புரையினை ஆற்றிய ஆய்வாளர் திரு சூ.யோ பற்றிமாகரன் அவர்கள் சைவம் தமிழர்களின் தத்துவம் -மனதின் ஆற்றல்களை அறிவு வளர்ப்பது போல அந்த மனதினை இயக்கும் உணர்வின் ஆற்றல்களை வளர்ப்பது சைவம் - சைவ அறிவைப் பெறும் பொழுதே திருமூலர் கூறும் பத்தாவது அறிவை ஒருவர் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் உயர்நிலைக்கு சென்றிட முடியும் என்பது நம்முன்னோர் அனுபவம் - இத்தகைய சிறப்புடை தமிழர் ஆன்மீகமாகவும் தத்துவமாகவும் உள்ள சைவத்தை தமிழர் ஒருவர் அறிவது அவரது இனஅடையாளத் திற்கும் இனமான உணர்வுக்கும் அவசியம் என்றார். அத்துடன் சைவப்புலவர் பட்டம் யாழ்ப்பல்கலைகழகத்தில் முதுமாணிப்பட்டப் படிப்புக்கான தகுதியாகவும் இலங்கையில் சைவ பாடத்தினை பள்ளிக்கூடங்களில் படிப்பிப்பதற்கான தகுதியாகவும் உள்ளமை யினால் தொழில் தரு நிலையிலும் இக்கற்கை நெறி வாழ்வுக்கான பலத்தினை அளிக்கிற தெனவும் எடுத்துக் கூறினார்.

தொடர்ந்து நகுலேஸவரக் குருக்கள் இளஞ்சைவப்புலவர் பட்டத்தினைப் பெற்ற திருமதி விஜயதரிசினி ஜோதிநாதன் மற்றும் சைவப்புலவர் பட்டத்தினைப் பெற்ற திரு கதிரித்தம்பி சிவானந்தன் ஆகியோருக்கு சைவப் பரீட்சைகள் தொடக்கி வைக்கப்பட்ட காலம் முதல் பாரம்பரியமாக வழங்கப்பட்டு வரும் பட்டச் சான்றிதழ்களை வழங்கினார். திரு. க .சிவானந்தன் அவர்களுக்கு தேர்வில் இரண்டாம் பிரிவில் சித்தி பெற்றவர்களில் முதலாவதாக வந்தமைக்கான ஞாபகார்த்தப் பரிசிலும் மூத்த அறிஞரான சிவஸ்ரீ சிவசுப்பிரமணியக் குருக்களால் வழங்கப் பெற்றது.

சைவப்புலவர் சங்கத்தை இலண்டனில் 01.02. 2007ல் தொடக்கி வைத்து ஆசி வழங்கிய இலண்டன் ஈஸ்ராம் முருகன் கோவில் தலைமைக்குரு கைலை சிவஸ்ரீ நாகநாத சிவக்குருக்களுக்கு அகில இலங்கைச் சைவப்புலவர் சபை பட்டமளிப்பு மண்டபத்தில் சிறப்பு மதிப்பளித்தது.
தொடர்ந்து கவிஞர் திரு அ வேணுகோபாலன் தலைமையில் இளம் மாணவர்கள் நியந்தன் - கஜிநாத் மாணவி லகரி ஜோதிநாதன் ஆகியோர் மேன்மைகொள் சைவநீதி என்னும் தலைப்பில் கவியரங்கு சிறப்பாக நடாத்தப் பெற்றது. இவ்வருடம் இலண்டனிலும் யேர்மனிலும் நோர்வேயிலும் சைவப்புலவர் பரீட்சை எடுக்கும் மாணவர்கள் சார்பில் ஆசிரியர் நாகன் சூரி நன்றியுரை கூறினார்.

இவ்வாண்டுக்கான அனைத்துப் பரீட்சை களுக்குமான விண்ணப்ப முடிவுத்திகதி மே மாதம் 30ம் திகதி என்றும் விண்ணப்பங்களை 07956497291 என்னும் கைத்தொலைபேசி மூலம் இணைப்பாளர் செல்லத்துரை நாவரசனுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டது.

# பூகோள அமைதி ஆதரவுக் குழுவின் மாநாடு

பூகோள அமைதி ஆதரவுக் குழு - ஐக்கிய இராச்சியம் என்னும் அமைப்பினால் சிறிலங்கா இனப்பிரச்சினை தொடர்பாக ஓர் அனைத்துலக மாநாடு ஒன்று கடந்த பங்குனி மாதம் 22-ம் 23-ம் திகதி கிழக்கு இலண்டன் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது.
இந்தியா, தென்னாபிரிக்கா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சுவிடன், நெதர்லாந்து, நோர்வே போன்ற இடங்களில் இருந்து வந்த பிரதிநிதிகளும் பிரித்தானியாவில் பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகளும் மாநாட்டில் உரையாற்றினர்.
மாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதிகளில் சிலரை படத்தில் காண்கிறீர்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கடந்தமாத போட்டி முடிவுகள்

## சொற்களைத் தேடுதல் போட்டி முடிவு

**போட்டியில் பரிசுபெறும் இருவர்**

1. பிறிசில்லா முருகதாஸ், நியுபரி
2. சிவரூபன் தரன், ஈஸ்ட்காம்

### சரியாக விடை எழுதியனுப்பியவர்களில் இடமுள்ளவரை இடம் பெறுபவர்கள் வருமாறு



சு.மகேந்திரன், எட்ச்வெயர்
அகல்யா ரங்கராஜா, கற்பேர்ட்
அவானிஸ் நரேந்திரன்,
காருணி குலோத்துங்கன், இல்பேர்ட்
பிரவீணன் மத்தியூ, பிரதாபன் மத்தியூ குறொய்டன்
சிரோஷியா சிறி, கௌண்சிலோ
மிதுஷானி சிறி, கௌண்சிலோ
ரி.சுரேந்தன், கற்பேர்ட்
நித்தியா இராசலிங்கம், எட்மன்ரன்
நர்மதன் இராஜகோபால், நியுமோல்டன்
றஜீவன் சாந்தக்குமார், கான்ஸ்கில்
ராஜகுமாரி ரவீந்திரன், வெம்பிளி
யசிக்கா நந்தகுமார், கிளே-கோள்
தீபா நந்தகுமார், கிளே-கோள்
நீரா நந்தகுமார், கிளே-கோள்
எஸ்.எம்.மூர்த்தி, சவுத்வுட்பேர்ட்
துவாரகா தம்பையா, லூசியம்
ஸ்ரெபி தயாளன், கைவிக்கம்
அருச்சானா சிவசுதன், மனோர்பார்க்
எஸ்.யசோதரா, வுட்போர்ட் கிறீன்
எஸ்.சிவசாமி, வுடபோர்ட் கிறீன்
எஸ்.ரி.தேவி, வுட்போர்ட் கிறீன்
எஸ்.டி, சாம், வுட்போர்ட் கிறீன்
ஜெ.ஜெயதர்ஷன், பெக்ரன்
வாரகி சிவராஜசிங்கம். சவுத்தோல்
ரிஷி சிவராஜசிங்கம், சவுத்தோல்
சாரங்கன் லோகநாதன். எட்மன்ரன்
வர்ணன் லோகநாதன். எட்மன்ரன்
தமிழன்பன் அன்புசாள்ஸ், இல்பேர்ட்
விவோகா அன்புசாள்ஸ், இல்பேர்ட்
இ.சுயேந்தினி, நோர்த் ஏக்கர்
இ.நிதுர்ஷன், நோர்த் ஏக்கர்
இராசலிங்கம் தர்ஷனா, நோர்த் ஏக்கர்
டிலக்ஷனா தயானந்தன், வெஸ்ட் குறொய்டன்
திலக்ஷினி, குறொய்டன்
சிந்துஜா மதன், எட்ச்வெயர்
ஜெசிந்தா யேசுதாசன், கம்பர்வெல்
ரமணன் தங்கவேல், சவுத்தோல்
அபிதா தங்கவேல், சவுத்தோல்
ம.அக்சயா, கற்பேர்ட்
ஆரூரன் சிவதவராஜா, வால்த்தம்ஸ்ரோ
சிவானி தரன், ஈஸ்ட்காம்
ஞா.அபினேஷ், இல்பேர்ட்
க.யோகராஜா, கற்பேர்ட்

## குறுக்கெழுத்துப் போட்டி முடிவு

**போட்டியில் பரிசுபெறும் இருவர்**

1. ஜனந்தன் மகேந்திரன், எட்ச்வெயர்
2. நித்தியா இராசலிங்கம், எட்மன்ரன

### சரியாக விடை எழுதியனுப்பியவர்களில் இடமுள்ளவரை இடம் பெறுபவர்கள் வருமாறு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| பொ | ங் | க | ல் | ■ | றா | பு | ண் | வெ |
| ற் | ■ | ட் | ■ | ப | ■ | ப் | ■ | ப் |
| கி | ட் | டு | ■ | தி | ம் | ர | த் | ப |
| னி | ■ | ம | ண | ல் | ■ | ப | ■ | ம் |
| ■ | ■ | ர | ■ | ■ | ■ | ■ | உ | ■ |
| பு | ய | ம் | ■ | வி | ■ | உ | மி | ள் |
| ப் | ■ | ■ | து | ரு | வ | ம் | ■ | க |
| று | கா | க் | மூ | அ | ■ | ட | ■ | னி |
| உ | ■ | ■ | உ | ■ | ம் | ல | னி | நா |

மு.பிறிசில்லா, நியுபரி
அவானிஸ் நரேந்திரன்,
காருணி குலோத்துங்கன், இல்பேர்ட்
பிரவீணன் மத்தியூ, பிரதாபன் மத்தி குறொய்டன்
திலகவதி குமாரசுவாமி, குறொய்டன்
தி.லக்ஷன், இல்பேர்ட்
சிரோஷியா சிறி, கௌண்சிலோ
மிதுஷானி சிறி, கௌண்சிலோ
ரி.சுரேந்தன், கற்பேர்ட்
ஆரூரன் சிவதவராஜா, வால்த்தம்ஸ்ரோ
நிசானி சாந்தக்குமார், கான்ஸ்கில்
றஜீவன் சாந்தக்குமார், கான்ஸ்கில்
சறோஜா ரவீந்திரன், வெம்பிளி
எஸ்.எம். மூர்த்தி, சவுத்வுட்பேர்ட்
லோ.சாரங்கன், எட்மென்ரன்
வர்ணன் லோகேஸ்வரன், எட்மென்ரன்
தமிழன்பன் அன்புசாள்ஸ், இல்பேர்ட்
மலர்விழி அன்புசாள்ஸ், இல்பேர்ட்
ம.அச்சயா, கற்பேர்ட்
றஞ்சனா குமாரசாமி, குறொய்டன்
ஞா.அபினேஷ், இல்பேர்ட்
க.யோகராஜா, கற்பேர்ட்
விதுஷன் வெல்வகுமார், என்பீல்ட்

# மோதலை காதலாக்குவது எப்படி?

திருமணத்துக்கு பின்னர் இளந் தம்பதியினருக்குள் இணக்குகளும், பிணக்குகளும் ஏற்படுவது சகசம்தான் என்றாலும், அது முற்றிவிடாமல் இருக்க வேண்டும். அப்படி இருவருக்குள்ளும் ஏற்படும் மோதலை காதலாக்குவது எப்படி? என்பதை இங்கே பார்ப்போம்,

1. இருவரிடமும் இருக்கும் அன்பை வெளிப் படையாக, அடிக்கடி வெளிக்காட்ட வேண்டும்.
2. இருவருக்கும் யார் பெரியவர்கள்? என்ற நினைப்போ... அதற்குரிய வார்த்தையோ பரிமாறிக் கொள்ளவே கூடாது.



3. இருவரும் எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் பாசத்தை... காதலை பகிர்ந்து கொண்டால் நல்லது.
4. வேலையிலோ அல்லது தொழிலிலோ எவ்வளவு தான் பரபரப்பாக இருந்தாலும், இருவரும் தனிமையில் சந்தித்துக் கொள்ளும், பேசிக் கொள்ளும் நேரத்தை தனியாக ஒதுக்குங்கள்.
5. இருவரின் மனதுக்குள்ளும் ஏற்படும் சாதாரண ஈகோ... இறுதியில் பிரிவில் வந்து நிற்கும் என்பதை மறந்து விடாதீர்கள். இதனால் தாம்பத்தியமும் பாதிக்கப்படும் என்பதை நினைவில் வைத்துக் கொம்ளுங்கள்.
6. கணவனை மனைவியும், மனைவியை கணவனும் முழுமையாக நம்ப வேண்டும். இல்லாவிட்டால் சந்தேகப் பேய் உங்களை பிரித்துவிடும்.
7. தெரியாமல் செய்யும் சின்ன சின்ன குற்றங்களை கண்டுகொள்ளாமல் இருப்பதே நல்லது. அவற்றை பெரிதாக நினைத்து பேச ஆரம்பித்தால் அதுவே பிரச்சினையாகி விடும்.
8. தெரிந்தோ... தெரியாமலோ தவறு செய்தால்... அதை அன்போடு திருத்தப் பாருங்கள். அதற்காக எந்த கடும் சொற்களையும் பயன்படுத்தி விடாதீர்கள்.
9. எந்தப் பிரச்சினை வந்தாலும், இருவருக்குள்ளும் எடுத்தெறிஞ்சு பேசி விடவேண்டாம். ஒருவர் மற்றவரின் குடும்பத்தைப் பற்றி தரக்குறைவாக பேசக்கூடாது.
10. நீங்கள் ஏதேனும் தவறு செய்துவிட்டால்... ஈகோ பார்க்காமல் உங்கள் துணையிடம் மன்னிப்பு கேளுங்கள். நீங்கள் கேட்கும் மன்னிப்பே உங்களை அவர்களுடைய மனதுக்குள் பேற்ற வைத்துவிடும்.
11. எப்போதும்... எங்கேயும்... எதற்காகவும் எதையும் மறைத்து பேச வேண்டாம். மற்றவர்களிடம் எப்படி இருந்தாலும் பரவாயில்லை. உங்கள் துணைவருடன் திறந்த மனதுடன் பேசுங்கள்.
12. வீட்டில் நடக்கும் நிகழ்ச்சி மற்றும் வேறு எதற்காவது உங்களுக்கும் வாக்கு வாதம் ஏற்பட்டால், ‘நான் சொல்வதுதான் சரி’ என்று வாதாட வேண்டாம். இதனால் வார்த்தைகள் தடித்துவிடும்.
13. தாம்பத்தியத்தின் போது உங்களிடம் இருக்கும் பாலியல் குறைபாடுகளை மனம் திறந்து சொல்லுங்கள். இதனால் பரஸ்பரம் இருவருக்கும்ளுள் ஆறுதல் கிடைக்கும். உங்களுக்காக அவர்கள் விட்டுக் கொடுப்பார்கள்.
14. இரண்டு குடும்பங்களைப் பற்றி தரக்குறைவாகவோ... அல்லது மூன்றாம் மனிதர்கள் முன்பாகவோ எப்போதும் எதுவும் பேச வேண்டாம்.
15. மற்றவர்கள் முன்னிலையில் உங்களுடைய துணையைப் பற்றி எந்தக் குறையையும் வெளிப்படுத்த வேண்டாம்.
16. வீட்டில் எதாவது பிரச்சினை ஏற்பட்டால் அடுத்தவர் மீது பழி போடாமல் தீர்வுக்கான வழிகளை இருவரும் சேர்ந்தே தேடுங்கள்.

# மழையைக் கொண்டுவரும் பாக்டீரியா எது!

மழையைக் கொடுக்கும் பக்டீரியா எது என்று அமெரிக்காவின் மொன்டானா அரச பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கணடு பிடித்துள்ளனர். அதன் பெயர் வெளியிடப்படவில்லை. மேலும் பல ஆய்வுகளை நடத்திய பிறகே உறுதி செய்யப்படும்.

இந்த பாக்டீரியா உலகின் எல்லாப் பகுதிகளிலும் காணப்படுகிறது. தாவரத்தின் இலை மீது இவை தங்கியிருக்கும். இவை விண்ணில் பறந்து சென்று ஒரு கூட்டமாக நிலைபெறும். இவற்றைச் சுற்றி உறைந்த பனிக்கட்டிகள் சேரும். அந்தப் பரப்பே இறுகி மேகமாக மாறும். பிறகு அதில் மேலும் பல மடங்கு நீர்த்துளிகள் சேர்ந்து கருமேகமாகி மழை பெய்யும்.

அமெரிக்காவிலேயே மொன்டானா, கலிபோர்னியா, கிழக்கு அமெரிக்கா ஆகிய பகுதிகளிலும் ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா, மொராக்கோ, பிரான்ஸ்,ரஷியா ஆகிய நாடுகளிலும் கூட இந்த பக்டீரியா காணப்படுகிறது.

வறட்சியால் பாதிக்கப்படும் பகுதிகளில் இந்த பாக்டீரியாவைக் கொண்டுபோய் விட்டால் மழை பெய்யும் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

அமெரிக்காவின் மொன்டானா பல்கலைக்கழக விஞ்ஞானிகளின் இந்தக் கண்டுபிடிப்பை ‘சயின்ஸ்’ என்ற பத்திரிகையில் சமீபத்தில் பிரசுரித்துள்ளனர். பல்கலைக்கழகப் பேராசிரியர் டேவிட் சேண்ட்ஸ் இந்த பக்டீரியாக்கள் குறித்து விளக்கும்போது இவை 84 டிகிரி பாரன்ஹைட்டுக்கு மேல் வெப்பம் இருந்தால் வளராது என்கிறார்.

மேகம் குளிர்ந்து மழை பெய்ய ஆரம்பித்தவுடன் இந்த பக்டீரியாக்கள் அவற்றிலிருந்து இறங்கி ஏதாவது ஒரு தாவரத்தின் இலை மீது படிந்து அங்கேயே தங்கிவிடும். சில வேளைகளில் எந்த தாவரத்தின் மீது விழுந்ததோ அதன் இலையிலிருந்து தனக்கு வேண்டிய உணவை எடுத்துக்கொண்டுவிட்டு அதை அழுகும்படி விட்டுவிடும். மழை பெய்யும்போதெல்லாம் இந்த பக்டீரியா தொடர்ந்து வளர்ந்து கொண்டே இருக்கும் என்று விஞ்ஞானி தெரிவிக்கிறார்.

# அவசியப்படாத அவசர உணவு

அவசர உலகில், இன்று அதிகம் விரும்பப் படுவது அவசர உணவு வகைகள்தானே?



அதிலும் இவற்றை பாடசாலை மாணவர்கள், மாணவிகள் அதிகம் விரும்பி உண்டு வருகின்றார்கள். பல நாட்டு அரசுகளுக்கு இதுவொரு தலையிடி தரும் விவகாரமாக மாறியுள்ளது. வயதுக்கு மீறிய உடல் பருமன் கொண்ட பிள்ளைகளாக இருப்பது, இன்றைய கோலத்தின் பெரியதொரு தாக்கம் என்பதில் சந்தேகமே இல்லை. ஆங்கிலேய அரசு விழித்துக் கொண்டிருக்கின்றது. மதிய உணவுக்கு பல பிள்ளைகள் அவசர உணவைத் தேடி ஓடுவதற்கு, ஆப்பு வைக்கும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார்கள் கல்வி அமைச்சின் அதிகாரிகள். மதிய உணவு இடைவேளை நேரத்தில், பாடசாலைகளின் வெளிக் கதவுகள் இனி பூட்டப்படப் போகின்றன. பாடசாலைகளை அண்மித்துள்ள அவசர உணவு விற்பனை நிலையங்கள் தொடர்ந்து தமது வியாபாரத்தை நடத்த, இனி அனுமதிப் பததிரங்கள் வழங்குவது நிறுத்தப்படலாம். வாகனங்கள் பாடசாலை களுக்கு அருகே நிறுத்தப்பட்டு, அவசர உணவு வகையறாக்களை பிள்ளைகளுக்கு விற்பது, இனி தடைசெய்யப்படப் போகின்றது. இப்படிப் பல நடவடிக்கைகளை கவுன்சில் அதிகாரிகள் எடுக்க முற்பட்டாலும், இவற்றைச் செய்ல்படுத்துவதில் பல சிக்கல்களையும் எதிர்கொண்டாக வேண்டும் என்பதையும் கருத்தில் எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். பல பாடசாலைகள் ஒன்றுக்கு மேற்பட்ட வெளிக்கதவுகளைக் கொண்டதாக இருப்பது, விற்பனை நிலையங்களின் அனுமதிப் பத்திரங்களை உடனடியாகச் ரத்துச் செய்வது போன்ற விடய்ங்கள் பிரச்சினைக்குரிய சில உதாரணங்கள் என்கிறார்கள் அதிகாரிகள். அவசியமில்லாதவை களையப்படுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் நலனுக்காக பாடுபடுவேன்: மலேசிய அமைச்சர் சுப்ரமணியம்

தமிழர்கள் மலேசியாவில் வேலைவாய்ப்புகளை அதிக அளவில் பெறும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மலேசிய மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் எஸ்.சுப்ரமணியம் கூறியுள்ளார்.

மலேசியாவில் சமீபத்தில் நடந்த பொதுத் தேர்தலில் பிரதமர் படாவி தலைமையிலான பாரிசன் தேசிய கூட்டணிக்கு பெரும் அடி விழுந்தது. மலேசிய வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு மிகப் பெரும் தோல்வியை சந்தித்தது பாரிசன் தேசிய கூட்டணி. இருப்பினும் பெரும்பான்மை பலம் பெற்றதால் மீண்டும் ஆட்சி அமைத்துள்ளது.

மீண்டும் படாவியே பிரதமராகியுள்ளார். சமீபத்தில் தனது அமைச்சரவைப் பட்டியலை அவர் வெளியிட்டார். அமைச்சரவையில் நான்கு தமிழர்களுக்கு இடம் கிடைத்துள்ளது. இதில் டொக்டர் எஸ்.சுப்ரமணியம் மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சராக மந்திரிசபை அந்தஸ்தில் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மட்டுமே மந்திரிசபை அமைச்சர் ஆவார். கே.தேவமணி (பிரதமர் அலுவலக துணை அமைச்சர்), ஏ.கோகிலன் (தோட்டத் தொழில்துறை துணை அமைச்சர்), சரவணன் (வெளியுறவு வர்த்தக துணை அமைச்சர்) ஆகியோர் துணை அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
இந்த நிலையில் டாக்டர் சுப்ரமணியம் கோலாலம்பூரில் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அவர் கூறுகையில், ஆளுங் கூட்டணியுடன் இணைந்து தமிழர்களின் உயர்வுக்காக மலேசிய இந்திய காங்கிரஸ் தொடர்ந்து பாடுபடும். ஆளும் பாரிசன் தேசிய கூட்டணியில் நாங்களும் முக்கிய அங்கம் வகிக்கிறோம்.
வாழ்வோ, சாவோ, உயர்வோ, தாழ்வோ, பாரிசன் தேசிய கூட்டணியுடன்தான் மலேசிய இந்திய காங்கிரஸ் இருக்கும். இத்தனை காலமாக இருவரும் இணைந்தே செயல்பட்டு வந்துள்ளோம். இந்த கூட்டணி எதிர்காலத்திலும் தொடரும்.
மலேசியாவில் வசிக்கும் இந்திய வம்சா வளியினரிடையே நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.
எனது அமைச்சகம் மூலமாக, தமிழ் இளைஞர்களுக்கு பிற இனத்தவரோடு போட்டி போட்டு வேலைகளைப் பெறுவதற்கேற்ற தகுதிகளை வளர்த்துக் கொள்ள உரிய பயிற்சிகள் அளிக்கத் திட்டமிட்டுள்ளேன் என்றார் சுப்ரமணியம்.
இதற்கு முன்பு மலேசிய அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த ஒரே மந்திரிசபை அமைச்சர் டத்தோ சாமிவேலுதான். கடந்த 30 வருடங்களாக அவர்தான் மலேசிய இந்திய காங்கிரஸ் கட்சியின் அசைக்க முடியாத தலைவராக இருந்து வந்தார்.
ஆனால் நாடாளுமன்றத் தேர்தலில் அவர் தோல்வியுற்றதால் அமைச்சராக முடியாமல் போய் விட்டது. இதுதான் அவர் பெறும் முதல் தேர்தல் தோல்வி என்பது குறிப்பிடத்தக்கது.


## KNC School of Motoring

★ DSA Approved Driving Instructors with more than 20 years experience.
★ PASSPLUS registered Instructors.
★ New Drivers save £'s with Car Insurances.
★ Motorway Lessons.
★ All the Instructors are members of the Association of Driving Instructors and Road Safety Officers of Haringay

தமிழரால் தமிழில் தமிழர்களுக்கு ஓட்டுனர் பயிற்சி

உங்கள் *Theory Test and Hazard Perception Test*
ஆகிய இரண்டும் தமிழில் கணனி மூலம் பயிற்சி வழங்கப்படும்
*Practical Test* தமிழில் தரமான முறையில் பயிற்றுவிக்கப்படும்

Area Covered West London.

Please contact Patrick:
**Tel: 07956 387386, 020 8864 9329,**
**Fax : 020 8423 0403**


## தந்தையை போல் மகள்!



நிதியமைச்சர் ப. சிதம்பரத்தின் 2008-09-ம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தை ஆதரித்து மாநிலங்களவையில் பேசிய கனிமொழி (திமுக), கனவு மெய்ப்பட வேண்டும், கைவசமாவது விரைவில் வேண்டும் என்று பாரதியாரின் பாடல்களை மேற்கோள் காட்டி முடித்தாராம்.

# ஒரே திரைப்படத்தில் கருணாநிதி, ஜெயலலிதா, திருமாவளவன்!

கமல்காசனின் தசாவதாரம் படத்தில் 3 வித பாத்திரங்களில் வரும் கமல்காசனுடன், அரசியல் தலைவர்களான கருணாநிதி, ஜெயலலிதா, திருமாவளவன் ஆகியோர் நடிக்கவுள்ளனராம்.
சினிமாவால் பலவற்றையும் சாதிக்க முடியும் என்பதை நிரூபிப்பது போல இந்த புதிய செய்தி உள்ளது. முதல்வராக கருணாநிதியும், எதிர்க்கட்சித் தலைவராக ஜெயலலிதாவும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவராக தொல்.திருமாவளவனும், தசாவதாரம் படத்தில் ஆளுக்கு ஒரு சீனில் தோன்றவுள்ளனர்.
படத்தின் கதைப்படி சென்னையைச் சேர்ந்த விஞ்ஞானி கமல், மிகப் பெரிய ஒரு அறிவியல் கண்டுபிடிப்பை நிகழ்த்துகிறார். இதையடுத்து அவருக்குப் பாராட்டு விழா நடத்த தீர்மானிக்கின்றனர். அவரது சொந்த ஊர் சென்னை என்பதால் சென்னையில் பாராட்டு விழா நடைபெறுகிறது.
சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் பாராட்டு விழா நடக்கிறது. இந்த விழாவில் அமெரிக்க அதிபர் ஜோரச் புஷ் (அதுவும் கமல்தான்) தலைமை தாங்குகிறார். இந்த விழாவில் பல்வேறு அரசியல் தலைவர்கள் கலந்து கொண்டு விஞ்ஞானி கமலைப் பாராட்டுகின்றனர். இதுதான் காட்சி.

# இந்தியாவின் ஆயுத உதவியை கைவிடக் கோரி மதுரை – சென்னையில் பொதுக்கூட்டம்: விஜய டி.ராஜேந்தர்

இலங்கையில் தமிழர்களைப் படுகொலை செய்யும் சிறிலங்கா இராணுவத்துக்கு இந்தியா செய்து வரும் உதவிகளை தவிர்க்கக் கோரி மதுரை மற்றும் சென்னையில்



பொதுக்கூட்டங்களை நடத்த உள்ளதாக தமிழக நடிகரும் லட்சிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளருமான விஜய டி.ராஜேந்தர் அறிவித்துள்ளார்.
சென்னையில் பங்குனி 22ம் திகதி ஊடகவியலாளர்களிடம் அவர் கூறியதாவது: இலங்கையில் வாழும் தமிழர்கள் அங்குள்ள இராணுவத்தினரால் கொல்லப்படுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு ஆதரவுக்குரல் கொடுக்க தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாரும் முன்வரவில்லை. இலங்கைத் தமிழர்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக உணவு, மருந்துப் பொருட்களை அனுப்ப தமிழக அரசு முயற்சி செய்யவில்லை.

ஆனால், இலங்கை இராணுவத்தினருக்கு இங்கு ஆயுதப் பயிற்சி அளிப்பதுடன், அவர்களுக்கு தேவையான ராடார் கருவிகளை அளித்து வருகின்றோம். இந்திரா காந்தி ஒரு சீக்கியரால் தான் கொல்லப்பட்டார். அதற்காக சீக்கியர்களுக்கு இந்தியாவில் தடை விதித்தா விட்டோம். தற்போது பிரதமராக இருக்கும் மன்மோகன் சிங் கூட சீக்கியர் தான். இலங்கை இராணுவத்திற்கு இந்திய அரசு நேரடியாகவோ, மறைமுகமாகவோ உதவி செய்வதை தவிர்க்க வலியுறுத்தி மதுரையில் மார்ச் 29 ஆம் நாளும், சென்னையில் ஏப்ரல் 5 ஆம் நாளும் பொதுக்கூட்டம் நடைபெறும் என்றார் அவர்.

## உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தால் நடத்தப்படும் 16வது உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் வைகாசி மாதம் 5ம் திகதி திங்கட்கிழமை (வங்கி விடுமுறை) காலை மணியில் 8.00 இருந்து மாலை 8.00 மணி வரை Warren farm Sports Centre,Wimdmill Lane, Southall, Middlesex UB2 4NE நடைபெறஉள்ளது.

# கரம் விளையாட்டில் தமிழ்பெண் இழவழகி உலக சாதனை

உலக அளவில் கரம் விளையாட்டுப் போட்டிகளில் சாதனை படைத்துள்ளார் தமிழகத்தைச் சேர்ந்த இளவழகி.

கரம் விளையாட்டில் 1997ம் ஆண்டிலிருந்து சப்-ஜுனியர் மாநில வாகைசூடியாக இருந்துவருகிறார் இளவழகி. இதுவரை சர்வதேச, தேசிய அளவில் 37 பதக்கங்களையும், கோப்பைகளையும் வென்றுள்ளார்.



அமெரிக்கா, இலங்கை மற்றும் மாலத்தீவு ஆகிய இடங்களில் நடைபெற்ற உலகப் போட்டிகளிலும் பங்கேற்று பதக்கங்களை பெற்றுள்ளார்.
சார்க் சாம்பியன் போட்டிகளில் 3 தங்கப் பதக்கங்களையும், ஆசிய சாம்பியன் போட்டியில் 3 தங்கப் பதக்கங்களையும் வென்றுள்ளார். தமிழ்நாட்டில் பெண் கரம் சம்பியன்களில் முதல் பிரிவிலும் மற்றும் இந்திய பெண் பிரிவில் 3வது இடத்திலும் உள்ளார்.
சமீபத்தில் பிரான்சில் உலக கரம் சாம்பியன்'சிப் விளையாட்டுப் போட்டியில் வென்று உலக சாம்பியன்சிப் பட்டம் வென்று தமிழகத்திற்கு புகழ் சேர்த்துள்ளார்.



இந் நிலையில் இளவழகி, உலக அளவில் கேரம் விளையாட்டுப் போட்டிகளில் சாதனை படைத்துள்ளதால், அவரது சாதனைகளை பாராட்டும் வகையிலும் அவர் தொடர்ந்து விளையாடி தமிழகத்துக்கு புகழ் சேர்க்க வசதியாகவும், தமிழக முதல்வர் கருணாநிதி இளவழகிக்கு ரூ. 10 இலட்சத்திற்கான காசோலையை வழங்கியுள்ளார்.

# 7 அடி உயரமான திருக்குறள் புத்தகம்

சென்னையில் 7 அடி உயர திருக்குறள் புத்தகம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இவ் செளியீட்டு விழாவுக்கு தமிழ் வளர்ச்சிக்குழு, அறநிலையத்துறை மற்றும் செய்தித்துறை செயலாளர் கோ.சந்தானம் தலைமை தாங்கினார். சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ச.தமிழ்வாணன் புத்தகத்தை திறந்து வைத்தார்.
தமிழ்மொழியில் சிறப்பம்சம் கொண்ட புத்தகங்களுள் ஒன்று திருவள்ளுவர் எழுதிய திருக்குறள். இரண்டு வரி சிறிய குறளில் அதிக பொருளை கொண்ட திருக்குறளை கோவையை சேர்ந்த மு.ராஜா ஷெரிப் என்பவர் பெரிய அளவில் பார்க்க ஆசைப்பட்டார்.
அதற்காக அவர் 7 அடி உயரம் மற்றும் 4 அடி அகலத்தில் பெரிய வடிவத்தில் திருக்குறள் மற்றும் தெளிவுரை கையெழுத்து பிரதியை உருவாக்கினார். வெள்ளை நிற பிளாஸ்டிக் தாள்களில் 304 பக்கங்களில் 150 கிலோ எடையில் புத்தகத்தை மிகவும் நவீனமயமாக வடிவமைத்து உள்ளனர். வெள்ளை நிற பிளாஸ்டிக் தாளில் பக்கத்திற்கு 5 குறள்கள் மற்றும் தெளிவுரை என்று



எழுதப்பட்டுள்ளன. இந்த புத்தகத்திற்கு அட்டையாக மிகவும் நேர்த்தியுடன் வடிவமைக்கப்பட்ட பலகையை பொருத்தியிருந்தனர்.
இம்மிகப்பெரிய அளவிலான திருக்குறள் புத்தகத்தின் அறிமுக விழா சென்னை எழும்பூரில் உள்ள இம்பீரியல் உல்லாச விடுதியில் நடந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SKY WINGS LTD
TRAVEL AGENTS WORLWIDE
24 hour Ticketing
◆ HOT DEALS
Srilankan Specials
ROYAL JORDANIAN
◆ South India Specials
Holiday Packages
Special Fares
◆ Far East Specials
Holiday Packages
Special Fares
◆ Holiday Packages
Special Fares
◆ Europe Specials
◆ Caribbean Specials
ATOL 5766
119 Tooting High Street
London SW17 0SY
IATA
Tel: 020 8672 9111

# USHANI Caterers
◈ உக்ஷானி கேற்ரறஸ் உணவுகள் சுத்தம் - சுவை - தரம் மிகுந்தவை.
◈ அனைத்துலக சுகாதார தரத்தில் தயார்செய்யப்படுகின்றன
◈ நேர்த்தியான முறையில் சுடச்சுட உணவுகள் பரிமாறும் முறைகள் கையாளப்படுகின்றன.
◈ திருமணம், பிறந்தநாள் கொண்டாட்டம், பூப்புநீராட்டுவிழா, கூட்டங்கள், மாநாடுகள் எதுவானாலும் அதற்குரியமுறையில் செய்து வழங்கப்படும்/ பரிமாறப்படும்
◈ போட்டே, வீடியோ, மண்டப அலங்கார வசதிகளும் உண்டு
◈ ஒவ்வொரு ஓடர்களுடனும் Free Surprise Dish வழங்கப்படுகிறது



0800 195 9975
Noon House, 34 Steele Road, Park Royal
London NW10 7AS
Mobile: 07867 911 591, Tel: 020 8838 4757

# BIRAVENAAS
South Indian & Sri Lankan Restaurant and Bar
Open Daily
Monday –Thursday
12.pm to 11.30pm
Friday to Sunday
12pm -01am



FREE DELIVERY*
Lunch Buffet £5.95
12.30 – 3.30
1, Sandhurst Market Sandhurst Road
Catford, London SE6 1DL
Tel: 020 8695 8625
*Orders over £12 with in 3 miles 6-10pm

# EELAM SHOP
ஈழம் கடை

இலங்கை, இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மளிகைப் பொருட்கள், கடலுணவு வகைகள், பத்திரிகைகள் சஞ்சிகைகள் போன்ற அனைத்துப் பொருட் களையும் மனநிறைவுடன் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம் ஈழம் கடை



399 Lewisham High Street
London SE13 6NZ
Tel: 020 8690 6545

# JK Gold & Fashion House

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இதயபூர்வமான இனிய
தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



புத்தாண்டைக் குதூகலமாக கொண்டாடி மகிழ உங்களுக்காக வரவழைக்கப்பட்ட குந்தன் வேலைப்பாடு கொண்ட Sequence, முத்து Designer சாறிகள் மற்றும் பரதநாட்டிய, பூப்புனித நீராட்டு விழாவிற்குத் தேவையான நகைகள் (அரக்கு) மலிவு விலையில் கிடைக்கும்

கோயிலுக்குத் தேவையான சகல பூசை சாமான்களும் எங்களிடம் கிடைக்கும்

JK Gold House & Fashion House
314-316 London Road
Croydon CRO 2TJ
Tel: 020 8684 4577
Fax: 020 8684 4677


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org